# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை (20-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:73


# அரசியல் தீர்வு குறித்து செவ்வாயன்று ஐ.தே.கவுடன் ஜனாதிபதி ஆராய்வு!

## ரணில் கலந்துகொள்வது குறித்து முடிவு இல்லை

கொழும்பு,பெப்.20

அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக ஐ.தே.கவுடன் இணக்கம் காண்பதற்கான கலந்துரையாடல்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்வதற்காக கட்சியின் இரண்டு பிரதிநிதிகளுடன் அலரி மாளிகைக்கு வருமாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் தமிழ்க் கட்சிகளுடனும் இணக்கம் ஏற்பட்ட பின்னர் ஐ.தே.கவுடனான பேச்சுக்கள் இடம்பெறும் என்று அரசு முன்னர் அறிவித்திருந்தது.

அதற்கமைய கடந்த மாதம் இடம்பெற்ற பேச்சுக்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் இணக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்த மாத ஆரம்பம் முதல் மூன்று கட்டங்களாக தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடைபெற்றது.

தற்போது ஐ.தே.கவுடனான பேச்சுக்கள் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ள போதிலும் செவ்வாயன்று நடைபெறும் முதலாவது கட்டப் பேச்சில் அவர் கலந்துகொள்வாரா? என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று நேற்று இரவு ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது கட்டப்பேச்சில் ஐ.தே.க. தூதுக்குழு ஒன்றைக் கலந்துகொள்ள அனுப்பிவிட்டு, இரண்டாம் கட்டப்பேச்சில் ரணில் கலந்து கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-6)

## 2,000 பயணிகள் திருமலையில்

திருகோணமலை,பெப்.20

கப்பல் மூலம் யாழ்ப்பாணம் பயணம் செய்வதற்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமான பயணிகள் திருகோணமலை பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ளனர் என்று பிரதேச செயலர் எஸ்.வேலும்மயிலும் தெரிவித்தார்.

தற்பொழுது காங்கேசன் துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'லங்காமுடித்த' கப்பல் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றி வந்த பின்னர் திருகோணமலையிருந்து இரு தடவைகள் காங்கேசன் துறைக்கு பயணிகளைக் கொண்டு செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே அமைச்சர் மீண்டும் பாலசிங்கத்தைச் சந்திப்பார்!

## இயல்புநிலை ஏற்படுத்துவது குறித்து ஆராயப்படும்

ஒஸ்லோ, பெப்ரவரி 20

**நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக் இவ்வாரம் மீண்டும் லண்டன் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.**

அதன் பின்னர் அவர் மீண்டும் இலங்கை வந்து ஜனாதிபதியுடனும் மற்றும் தலைவர்களுடனும் பேசுவார் என்று கூறப்படுகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே இலங்கைக்கான தனது முதலாவது சமாதானப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

லண்டன் சந்திப்பின் போது பேச்சுவார்த்தைக்கு முன்னர் இயல்பு நிலையை ஏற்படுத்தும் அவசியம் குறித்து நோர்வே வெளிவிவகார

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளைமுதல் நீராகாரமின்றி சிப்பாய்கள் உண்ணாவிரதம்!

### 7பேரின் உடல்நிலை பாதிப்பு

வவுனியா,பெப்.20

புதுக்குடியிருப்பில் கடந்த பத்து நாளகளாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவரும் 15 யுத்தக் கைதிகளும் நாளை முதல் நீராகாரமின்றி தமது போராட்டத்தைத் தொடரப்போவதாக அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் தம்மை அரசாங்கம் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி புதுக்குடியிருப்புப் பகுதியில் இவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது தெரிந்ததே.

தமது கோரிக்கைக்கு அரசு நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தினால் நாளை திங்கட்கிழமை முதல் நீராகாரமின்றித் தமது போராட்டத்தை தொடர்வதற்கு இவர்கள் தீர்மானித்துள்ளனர்.

உண்ணாவிரதிகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பிரதிநிதிகளும், மருத்துவக் குழுவினரும் தினமும் பார்வையிட்டு வருகின்றனர்.

இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த இந்த உண்ணாவிரதிகளில் ஏழு பேரின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-5-164)

## கைதிக்கு ஒருவர் வீதம் 15 பேர் மட்டும் செல்வர்!

வவுனியா,பெப்.20

வன்னியில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்கு கைதிகளின் குடும்ப உறுப்பினரில் ஒருவர் வீதம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் வன்னிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கான விவரங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த 15பேர் கொண்ட பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சு, விடுதலைப் புலிகள் ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே உறவினர்கள் வன்னிக்கு அழைத்துச் செல்லப்படுவர். செவ்வாய் அல்லது புதன்கிழமை இவர்கள் அழைத்துச் செல்லப்படலாம் என்று எதிர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறைக் கடலில் 5 மீனவரைக் காணோம்!!

வவுனியா, பெப்.20

மன்னார் சிலாவத்துறை கடற்பகுதியில் படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலையடுத்து 5 மீனவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலினால் பல மீன்பிடி உபகரணங்கள் அழிந்துள்ளதுடன் மீன்பிடிப் படகுகளும் சேதமடைந்துள்ளன.

எஸ்.அந்தோனிப்பிள்ளை(வயது 44), சூசைப்பிள்ளை பிரதாபன் (வயது31), மருததாயகம் வேலும் மயிலும் (வயது25), எஸ்.நடேஸ் குமார் (வயது30), யோசப் (வயது25) ஆகியோரே காணாமற்போன மீனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-5-8)

## தனங்களப்பு மோதலில் ஒருவர் உயிரிழப்பு

தனங்களப்பு பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் இனியமுதன் (கணபதிப்பிள்ளை கணேந்திரன் - முல்லைத்தீவு) என்பவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-8)

## கோப்பாயிலும் ஒருவர் பலி!

கோப்பாய் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாய் விளையாட்டரங்கு வீதியில் நேற்று மாலை 4மணியளவில் சிவில் உடையில் சைக்கிளில் வந்த சிலர் துப்பாக்கியால் சுட்டபடி இவரைத் துரத்திக் கொண்டுவந்த போதே இவர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற கோப்பாய் பொலீஸார் இளைஞனின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சேர்த்தனர்.

(இ-5-10-180)

## நொறுங்கிய ஹெலி பலாலிக்கு

கடந்த வியாழன் அன்று எழுதுமட்டுவாழில் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் சுட்டு வீழ்த்தப்பட்ட பெல் ரக ஹெலியின் நொறுங்கியபாகங்கள் நேற்றுப் படையினரால் பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.படையினரின் கனரக வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு இவை பலாலி நோக்கி கொண்டு செல்லப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

## பாஸ் நடைமுறைக்கு எதிராக வழக்கு

மட்டக்களப்பில் படையினரால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள 'பாஸ்' முறைக்கு எதிராக நீதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை நடத்தி முடிக்க ஒரு வருடகால அவகாசம்

கொழும்பு,பெப்.20

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் பட்சத்தில் அதனை ஒரு வருடகாலத்துக்குள் நடத்திமுடிக்க வேண்டும் என்ற நோர்வே வெளிவிவகார அமைச்சரின் யோசனையை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இவ்வாரம் லண்டன் சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கும் போது இது குறித்தும் ஆராய்வார் என்று நம்பப்படுகிறது.

அதேசமயம் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முதலில் லண்டனில் நடைபெறும் என்றும் பின்னர் தேவை ஏற்படும்பட்சத்தில் கொழும்பிலும் நடத்தப்படும் என்றும் ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ)

## படையினர் துப்பாக்கிச் சூட்டில் வாதரவத்தையில் ஒருவர் பலி!

### காயமடைந்தவர் பலாலிக்கு!

வலி.கிழக்கு,பெப்.20

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் நேற்றுக்காலை 11மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் பலியானார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவரின் சடலம் அச்சுவேலிப் பொலீஸாரினால் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தூர், வாதரவத்தைப் பகுதியில் இராணுவ அதிகாரிகள் சகிதம் இராணுவத்தினர் சென்று கொண்டிருந்தபோது அவர்களைக் கண்டதும் சந்தேகத்திற்கிடமான முறையில் ஓடிய இருவரை நோக்கிப் படையி

(12 ஆம் பக்கம் பார்க்க)

E.R. போக்குவரத்துச் சேவை ஆதரவில்
பருத்தித்துறை ஐ.வி.க நடத்திய
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 1999 இன்

இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

இடம்: திக்கமுனை மைதானம் காலம்: 20.02.2000
நேரம்: பிற்பகல் 3.00 மணி

பிரதமவிருந்தினர்: திரு. மா.பரமானந்தம்
(முகாமையாளர், தே.சே.வங்கி, பருத்தித்துறை)

3ஆம் இடத்திற்கான போட்டி
வதிரி டயமன்ட்ஸ் வி.க. எதிர் கருணாகரன் வி.க. உடுப்பிட்டி

இறுதிப்போட்டி
பருத்தித்துறை ஐ.வி.க.
எதிர்
வதிரி பொமேர்ஸ் வி.க.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(C/11093)



காணி தேவை

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்
கருணாலயம் – குழந்தைகள் இல்லம்

சிறுவர் - சிறுமியர் காப்பகங்கள் அமைப்பதற்காக யாழ். இராச வீதி/பலாலி வீதி அண்மித்த பகுதியில், நகரிலிருந்து சுமார் 3 கி.மீற்றர் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் 50 பரப்பு அளவிலான இரண்டு துண்டுக் காணிகள் தேவைப்படுகின்றன. உரிமையாளர்கள் அல்லது அவர்களின் தத்துவம் பெற்றோர் மாத்திரம் அணுகவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:–

Trustee,
Satguru Paramahamsa Sri Swami Ramdasji
Charitable Trust,
42, Shrubbery Gardens,
Colombo - 04.
Phone/Fax: 592529
E.Mail: arunan@sltnet.lk

OR

V.P.Paramalingam,
P.O. 5249,
Dubai - U.A.E.
Phone: (9714) 3590838
Fax: (9714) 3590714
E.mail: jairam@emirates net.ae

(C/11094)



சுன்னாகம் அருள்மிகு பழநி ஆண்டவர்
ஆலய 16 ஆம் ஆண்டு நிறைவு விழா



16 ஆம் ஆண்டு நிறைவு விழாவான மாசிமகத் திருநாளில் இன்று (20-02-2000) ஞாயிறு விஷேட அபிஷேக பூஜைகளும், அதனைத தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும் என்பதனை அனைத்து முருக அடிய நெஞ்சங்களுக்கும் அறியத் தருகின்றோம்

- முருக அடியார்கள்
(C/11093)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 1926 - 12 - 21



இறப்பு 2000 - 01 - 21

### அமரர் வேலுப்பிள்ளை கனகசபை

20-02-2000

கண்ணினுள் மணி நீ எங்கே?
கவிஞரின் கவி நீ எங்கே?
விண்ணில் வெண்ணிலவே எங்கே?
விடியலின் இசை நீ எங்கே?
மண்ணினுள் பொன் நீ எங்கே?
மாயவன் குழல் நீ எங்கே?
கண்ணினில் நீரைத் தந்து
கரைந்து தான் போனதெங்கே?

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தெருத்தலை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(C/11103)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்.பெப்.20

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் பெயர் வளைவு, சைக்கிள் பாதுகாப்புக் கொட்டகை என்பனவற்றின் திறப்பு விழா நாளை திங்கள் காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் சோ.பத்மநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பாடசாலையின் பெயர் வளைவும் சைக்கிள் பாதுகாப்புக் கொட்டகையையும் திறந்து வைப்பார்.

பாடசாலையின் பெயர் வளைவினை பழைய மாணவர் ஜெயதாஸும் சைக்கிள் பாதுகாப்புக் கொட்டகையை பாடசாலையில் உயர்கல்வி பெறும் மாணவர்களும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள்

(இ-4)


★ 2முதல் 8வரை மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள்
★ மாதாந்தப் புலமைப் பரிசில் ஊக்குவிப்பு III பெற்றுக்கொள்ளலாம்.

BOND
யாழ்நகர். (73855)



A/L 2000
தமிழ் தனித்துவ மீட்டல்
By N.தமிழிந்திரன்
* சலுகை - தெரிவு வினா விடைகள இப்பொழுதே...!
* பெறுகை - Finalக்கான 2 பரீட்சைகள்
* அறிகை - 1.3.2000 இற்குப் பின் அனுமதிகள் இல்லை.

வழமையான நிறுவனங்கள்.
(73842)



ராஜா
யாழ்ப்பாணம்
அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க சில தினங்கள் மட்டும்
கார்த்திக், பானுப்பிரியா நடித்த
கோபுர வாசலிலே
காட்சிகள் 10.30, 2.30
(C/11044)



லிபேட்டி
அச்சுவேலி
பிரபுதேவா, சுவலட்சுமி நடித்த
ஏழையின் சிரிப்பில்
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P – 070 – 212223
070 – 212678
(73658)



நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல்
அர்ஜுன், ரேவதி, பிரகாஷ்ராஜ், வடிவேலு நடித்த
சுபாஸ்
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11105)



SHAMROCK
கணக்கீடு
A/L 2000 - கம்பனி முடிவுக்கணக்கு
Mr.பாலவாசன்
ஆரம்பம் :-
21/2 Mon.4.45 p.m
(C/11102)


# மிதிவெடியில் காலை இழந்தார்

யாழ்ப்பாணம்.பெப்.20

இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள், விறகு எடுக்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

அளவெட்டி, கும்பாவெளிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தர்மலிங்கம் மோகன் (வயது 30) என்பவரே கால் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-9-10-15)

# மரண அறிவித்தல்கள்

## தா. முத்துக்குமாரு சறோஜினிதேவி

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வட்டு.மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு சறோஜினிதேவி நேற்று (19.02.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் சிசுபாலன் (ஜெயம் - சுவிஸ்), குபேரன்(மகான் - கனடா), சிறீதரன்(சிறி - கனடா), வாசு,பேபி ஆகியோரின் அன்புத் தாயாரும் கீதாரமணி, நிரஞ்சனாதேவி, வினோதினி ஆகியோரின் மாமியாரும் தாமோதினி, விவிசன், ஜீவிசன், ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை (73859)

தகவல்:
வாசு, பேபி.
(மக்கள்)

## திருமதி அந்தோனிப்பிள்ளை இக்னேசியாப்பிள்ளை

திருமதி அந்தோனிப்பிள்ளை இக்னேசியாப்பிள்ளை நேற்றுமுன்தினம் (18.02.2000) வெள்ளிக்கிழமை வன்னியில் காலமானார்.

இவர் திரு.பேதுறுப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், மிக்கேல்பிள்ளை (இலங்கை மின்சார சபை), ஆரோக்கிய மேரி, மரியதாஸ் (மக்கள் வங்கி - கொழும்பு), இராசநாயகம் (மக்கள் வங்கி - சாவகச்சேரி), சூசைநாதர் (முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - புதுக்குடியிருப்பு), அன்ரனி (கச்சேரி - முல்லைத்தீவு), திரேசாமேரி யோசப்பின் ஆகியோரின் அன்புத் தாயாரும் மரியமலர், காலஞ்சென்ற தம்பிராசா (ஊழியர், மக்கள் வங்கி), மேரி அஜந்தா, வளர்மதி, யோகநாதன், செல்வி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னியில் நடைபெற்றன.

11, சென் ஜேம்ஸ் வீதி,
குருநகர். (73843)

தகவல்:
அ.இராசநாயகம் (மகன்),
இ.கலிஸ்ரஸ் (பேரன்),
(நியூ பிறைற் கல்வி நிலையம்)

## செல்லர் நடராசா

இல.111, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த செல்லர் நடராசா (இராசதுரை) அவர்கள் நேற்று (19.02.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சிவஞானத்தின் அன்புக் கணவரும், இந்திராகாந்தி (லண்டன்), விமலகாந்தி (ஆசிரியை, சென்.சாள்ஸ், யாழ்.), நீதிராஜா (லண்டன்), தருமராஜா (லண்டன்), ஆனந்தராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் வைத்தியகலாநிதி இராசையா (லண்டன்), அற்புதச் சந்திரன் (விவசாய போதனாசிரியர், விவசாய ஆராய்ச்சி நிலையம், வவுனியா), சுஜாதா (லண்டன்), ஹேமா (லண்டன்), செல்வரத்தினம் (கனடா), இராமலிங்கம் (கனடா), நல்லம்மா (கனடா), யோகம்மா (கனடா), தம்பிரத்தினம் (கனடா), மலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜீந்தன், ஜனார்த்தன், லக்ஷனா, அபூர்வா ஆகியோரின் அன்புப் பேரனும் நவரத்தினத்தின் (யோகராசா) அன்புச் சகோதரரும், கனகம் மாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

111, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (73851)

தகவல்:
பொ.அற்புதச்சந்திரன்.

## அப்புத்துரை இராசா

(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்)

நல்லூர் தெற்கைச் சேர்ந்த அப்புத்துரை இராசா நேற்று (19.02.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், பூமணியின் அன்புக் கணவரும், நீலாவதி, இராசா, செல்லசோதி ஆகியோரின் அன்புத்தந்தையும், இரத்தினத்தின் அன்புச்சகோதரரும், கமலவேணி, சறோசினிதேவி ஆகியோரின் சிறிய தந்தையும் சண்முகலிங்கம் (கோப்பாய்), பவானி, சுவாலிங்கம் (பிரான்ஸ்), தெய்வேந்திரன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவதாரணி, சுகந்தி, கஜேந்திரன், சுபாசினி, சுரேஷ், அனுசா, சூட்டி, செந்தூரன், சசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/5, நீக்கிலஸ் லேன்,
கச்சேரி-நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (73854)

தகவல்:
மு.சண்முகலிங்கம்.

## வடிவேல் ஆச்சாரி குணசேகரன்

(குணா)

பிரபல மோட்டார் சைக்கிள் மெக்கானிக்கும் G.N.K. சேர்விஸ் ஸ்ரேசன் உரிமையாளருமாகிய குணசேகரன் (குணா) நேற்றுமுன்தினம் (18.02.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வடிவேல் ஆச்சாரி - முத்தம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசா பத்தர் - இராஜலக்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காமினியின் அன்புக் கணவரும் முகேஸ், இராதிகா, ரஷ்மி, சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20/2, நீராவியடிப் பிள்ளையார் கோயில் வீதி அருகில் இருந்து இன்று (20.02.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/2, நீராவியடிப் பிள்ளையார்
கோயில் அருகில்,
யாழ்ப்பாணம். (73856)

தகவல்:
மனைவி, மக்கள்.

தென்மராட்சியில் இடம்பெயர்ந்தோருக்கு

# இரண்டாம் கட்ட நிவாரணம் இன்னும் வழங்கவில்லை

கடந்த டிசெம்பர் மாதத்தில் தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான இரண்டாவது கட்ட நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை. ஒரு கட்ட நிவாரணம் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில் இவர்களில் ஒருபகுதி குடும்பங்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பி உள்ளன.

தனங்களப்பு, கோயிலாக்கண்டி, மறவன்புலோ ஆகிய இடங்களைச் சேர்ந்த பெரும்பாலான குடும்பங்கள் இன்னமும் வேறு இடங்களிலேயே தங்கியுள்ளன.

இவர்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணத்தை வழங்குவது தொடர்பாக யாழ். அரச அதிபர் கொழும்புடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-86)

மானிப்பாயில்

# மத்திய மகப்பேற்று நிலையம் அமைப்பதற்குக் காணி

நவாலி, பெப் 20

மானிப்பாய் மத்திய மருந்தக மகப்பேற்று நிலையம் அமைப்பதற்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்குச் சமீபமாகக் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையை நிறுவுவதற்கு இருந்து வந்த சிக்கல்களைத்தீர்க்குமுகமாகக் கடந்த 7 ஆம் திகதி சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் 19 பொது அமைப்புக்களை அமைத்து வைத்தியசாலை நிறுவவேண்டிய நிலையை விளக்கியதுடன் 9 பேர்கொண்ட குழு ஒன்றையும் அமைத்து ஒருவார காலத்துள் காணியைப் பெற்றுத் தருமாறு பணித்திருந்தார்.

இதற்கமையவே இக் குழுவினர் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து அதற்கான உறுதியின் பிரதியையும் பிரதேச செயலரிடம் கையளித்துள்ளனர். (ஐ-100))

# திருடிய மற்றும் கைவிடப்பட்ட 18 சைக்கிள்கள் நீதிமன்றில்

## சுன்னாகம் பொலீஸார் தகவல்

வலி. வடக்கு, பெப். 20

உரிமை கோரப்படாததும் அடையாளம் காட்டப்படாததுமான 18 சைக்கிள்கள் சுன்னாகம் பொலீஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திருடப்பட்ட சைக்கிள்களும் மற்றும் படையினரைக் கண்டு தப்பியோடியோர் கைவிட்டுச் சென்ற சைக்கிள்களும் இவற்றில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டோர் தமது சைக்கிள்கள் தொடர்பான உரிய ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பித்து மீளப்பெற முடியும் என்றும் —

ஆறு மாதகாலத்திலுள் சைக்கிள்களை மீளப்பெறாதவிடத்து அவை நீதிமன்றினால் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-86)

# ☺ மக்கள் முகம் ☺



திருநெல்வேலி, பெப். 20

கொக்குவிலைச் சேர்ந்த வைத்திய கலாநிதி வைரமுத்து சிவராஜா அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று நாட்டின் பல்வேறு அரச வைத்தியசாலைகளிலும் கடமையாற்றி வந்துள்ளார். மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக 10 வருடகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள டாக்டர் வை. சிவராஜா பயிற்றப்பட்ட உளவியலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-135)

★ ★ ★

மந்திகை மருத்துவமனையில் சிற்றூழியர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வந்த கி. சுப்பிரமணியம், 35 வருடகால சேவையின் பின், கடந்தமாத இறுதியில் ஓய்வு பெற்றார்.

1964 ஆம் ஆண்டு வவுனியா ஆதார வைத்தியசாலையில் நியமனம் பெற்ற இவர், அடம்பன், மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற அரச மருத்துவமனைகளில் பணிபுரிந்து இறுதியாக மந்திகை மருத்துவமனையிலேயே ஓய்வு பெற்றார். சிறந்த சமயத் தொண்டனாகிய இவர் சமூக சேவையாளனுமாவார். (ஐ—109)

★ ★ ★

வேலணைப் பிரதேச சபையின் பிரதம வைத்திய அதிகாரியும் அகில இலங்கை அரச சேவை ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைச் செயலாளருமான டாக்டர் பொன். சண்முகரத்தினம் (A.M.O.) வலி. கிழக்குப் பிரதேச சபையின் நீர்வேலி ஆயுர்வேத இலவச வைத்தியசாலைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்துக்கு டாக்டர் து. சண்முகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 20

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற எம். பி. பி. எஸ் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குச் சமூகமளிப்போர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதி, தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதி உட்பட 2 ஆயிரம் ரூபா பணமும் கொண்டுவருமாறு மருத்துவபீட 14 ஆம் அணியின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# இளைஞர் கழக சம்மேளனம்

தென்மராட்சி, பெப். 20

பளைப் பிரதேசத்தில் உள்ள இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டதையடுத்து பிரதேச சம்மேளன நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பிரதேச சம்மேளன அலுவலகத்தில் ச. முரளிதரன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி எஸ். சத்திவேல் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டார்.

பிரதேச சம்மேளனத்தின் தலைவராக செல்லையா நிமலரூபனும், செயலாளராக கந்தையா மனோகரனும் பொருளாளராக சி. ரமேஸ்வரனும் காப்பாளர்களாக பளை பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி, தென்னை அபிவிருத்தி அலுவலர் க. தனிநாயகம், பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் அ. கேதீஸ்வரன், இளைப்பாறிய அதிபர் வ. தாமோதரம்பிள்ளை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-117)

# கலைப் போட்டி

வலி. வடக்கு, பெப். 20

அரியாலை 81 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டி நடத்தப்பட்டு வரும் முன்னோடிக் கலைப் போட்டிகளில் ஒரு பகுதியாக பொது அறிவும் விவேகமும், சமய அறிவும் திருக்குறளுக்குமான பரீட்சைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சை கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

(ஐ-85)

# மெய்வல்லுநர் போட்டி

வடமராட்சி, பெப். 20

வல்வெட்டித்துறை மகளிர் மகாவித்தியாலய வருடாந்த இல்லத் தடகள விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் திருமதி கு. நகுலாம்பிகை தலைமையில் நடைபெறும்.

இளைப்பாறிய அதிபர் சா. சேவற்கொடியோன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)

# யாழ். சிறைச்சாலை விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து சிறைச்சாலை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்காகச் சிறைச்சாலைக்கு அருகில் உள்ள கட்டடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல்நீதிமன்றம் இங்கு இயங்கத் தொடங்கியதும் தற்போதுள்ள சிறையில் இடநெருக்கடி ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் —

அதைக் கருத்திற்கொண்டே சிறைச்சாலையைவிஸ்தரிக்கத் தீர்மானித்துள்ளதாக நீதிவான் இ. த. விக்னராஜா தெரிவித்தார். (ஐ-9-5)

# பளையில் வீடு இழந்தோருக்கு நஷ்ட ஈட்டுக் காசோலைகள்

இராணுவ நடவடிக்கையின் போது வீடுகளை இழந்த பளைப் பிரதேசத்திலுள்ள— ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் — குடும்பங்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் பளைப் பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களால் நேரில் பார்வையிட்டு வழங்கப்பட்ட அறிக்கைப் பிரகாரம் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

பிரதேசத்தில் வீடுகளை இழந்த குடும்பங்களில் 12 குடும்பங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக் காசோலைகள் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.


## கணனியாளர் தேவை

எமது நிறுவனமான

கங்கை ஒவ் (F) செற் கொம்பியூட்டர்

நிறுவனத்தில் தொழில் புரிவதற்கு MS WORD தெரிந்தவராகவும் தமிழ் ரைப்பிங் தெரிந்தவராகவும் இருப்பவர்கள் நேரில் சமுகம் தரவும்.

— நிர்வாகி

பிறவுண் வீதிக்கு அருகில்,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(73850)

## மனமார வாழ்த்துகின்றோம்

அராலியூர் சிற்பக்கலைஞர்

சி. அமரசிங்கம்

அவர்கள்

"இராதாதி நாதஸ்வர சிற்பகற்பகம்"
என்ற விருதினைப் பெற்றமையையிட்டு
நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

கலை சிறக்கவும் அவர் நீடூழி வாழவும்
எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

கலாபூஷணம்
ஆ. ஜீவரட்ணம் — தலைவர்.
த. பரராஜசிங்கம் — செயலாளர்.

அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்

(சி/11096).


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
26-11-1929

ஆண்டவன் திருவடியில்
24-01-2000

அமரர்

### அந்தோனிப்பிள்ளை பேர்சிபிலிப்ஸ்

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர்)

'ஆண்டவரின் இருசந்நிதியில்
ஆனந்தமுடன் வாழ்வீராக'

காலத்தின் கோலமதால் காலன் இட்ட கட்டளையால்
நிழல் தந்த விருட்சம் வேரோடுசாய்ந்ததுவே!
நினைவுகள் யாவும் நிசப்தமாகிப்போனதுவே!
ஊமையாய் அழுகின்றோம் உரிமை உறவுகள் — நாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

எமது துயரில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

என்றும் உங்கள் நினைவால் துயருற்றிருக்கும்
மனைவி, மகன், மருமகள், பேரன்.

தோமதர வீதி, மட்டக்குழி,
கொழும்பு.

(73847)

பருத்தித்துறை நகரசபை

**கொல்களம் அமைத்தல் தொடர்பான**

## அறிவித்தல்

பருத்தித்துறை நகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மேற்படி கொல்களம் கடற்கரை வீதியில் வெளிச்ச வீட்டிற்கு அருகில் அமைக்கப்படவுள்ளது. அமைவிடம் தொடர்பான ஆட்சேபனை ஏதுவும் பொது மக்களுக்கு இருப்பின் அவற்றை இவ் விளம்பரத் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செ. திருஞானசம்பந்தர்
செயலாளர்.
**நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
15—02—2000 (சி/11082)


# நிர்வாகம், அபிவிருத்தி தொடர்பாக உள்ளூராட்சி அலுவலருக்கு பயிற்சி

வலி. தென்மேற்கு, பெப்.20

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி நிறுவனத்தலைவர், செயலாளர், அபிவிருத்தி உதவியாளர்கள், சனசமூக அபிவிருத்தி உதவியாளர்களுக்கான நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான விசேட பயிற்சி யாழ். மாவட்டத்தில் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் திருகோணமலை நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு – கிழக்கு மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம் தெரிவித்தார்.

2000 ஆண்டில் வடக்கு—கிழக்கைச் சேர்ந்த திணைக்களங்கள் கணனி மயப்படுத்தப்படுவதுடன் கருத்திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதனை மையமாகக் கொண்டே பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-185)

## மணிவிழா

வலி.தென்மேற்கு, பெப். 20

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி முதல்வர் குணநாயகம் இராஜநாயகம் அவர்களின் மணி விழாவும் சேவைநலன் பாராட்டுவிழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம்பெறும்

யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா விழாவிற்கு தலைமை வகிப்பார்.

விழா நாயகரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்து அதி.வண. பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் ஆசியுரை ஆற்றுவார்.

வாழ்த்துரைகளை மு. சபாநாதன் (பதில்நீதிபதி), வி. சிவஞானபோதன் (அதிபர்), திருமதி கோமளம் அம்பலவாணர் (அதிபர்), திருமதி அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை (அதிபர்), அ. குமாரவேல் (ஆசிரியர்) ஆகியோர் வழங்குவர்.

முதன்மை ஆசிரியர் ந. சிவசண்முகமூர்த்தி வாழ்த்துப்பா மடல் வாசித்து வழங்குவார். (ஐ-185)

## நல்லூரில் 40 குடும்பங்களுக்கு கூரைச் சீற்றுகள் கிடைக்கும்

வலி. கிழக்கு. பெப். 20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 40 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைச்சீற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

இப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள — இதுவரை எந்த வித உதவிகளும் கிடைக்காத — குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை கூடிய குடும்பங்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படவுள்ளன.

இதற்கான முழு விவரங்களும் கிராம உத்தியோகத்தர்களால் திரட்டப்பட்டு வருவதாக நல்லூர் பதில் பிரதேச செயலர் எஸ். வேன் முருகோன்பிள்ளை தெரிவித்தார். (ஐ-180)


## நீங்காத நினைவதிலே நீங்கும் ஆண்டு இரண்டு



மலர்வு 25 — 02 — 1975

உதிர்வு 12 — 02 — 1998

### திருமதி மதிவதனா பன்னிருகரம் (மதி)

திதி: 20 — 02 — 2000

உயிர் உள்ளவரை உறங்காதம்மா
உன் உறவால் உருகும் உள்ளங்கள்
கடவுளைக் கையெடுப்போம் நித்தம்
உனது ஆத்ம சாந்திக்காக!

பிரிவால் துயருறும்
மகள்: வனிதாவும்,
குடும்பத்தவர்களும்.

தகவல்:
தாய்: யோகேஸ்வரி கந்தசாமி,
(யா. போ. வை. சாலை ஊழியர்),
16/4, 2 ஆம். குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (73758)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1912-07-08

மறைவு
2000-01-07

### திருமதி இராசமணி ஐயாத்துரை

மல்லாகம் பிள்ளையார் கிறேசர் உரிமையாளர்களில் ஒருவராகிய

ஐயாத்துரை இராமச்சந்திரா
R. M. C (R. D. A — R. D. D)
அவர்களின் அன்புத் தாயார்

இராசமணி ஐயாத்துரை அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்கள்,
பிள்ளையார் கிறேசர்

கோட் றோட்,
மல்லாகம். (73813)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## வெளிவாரி பட்டப் படிப்புகள் பதிவுக்கான பதிவேடுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1998/1999 கல்வி ஆண்டுக்கான வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 2000-02-21ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து வெளிவாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

—பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
17-02-2000
(சி/11088)



## தேவை

நல்ல அனுபவமுள்ள வீடியோ படப்பிடிப்பாளரும், MX50 மிக்சர் போடக்கூடிய அனுபவம் உள்ள கமராமென் தேவை. மாதச்சம்பளம் தரப்படும். நிரந்தர வேலை.

லான்மாஸ்ரர் ஓடக்கூடியவரும் சொக்கட்டான் பந்தல் பூட்டி அனுபவம் உள்ளவரும் தேவை. மாதச் சம்பளம் தரப்படும். நிரந்தர வேலை.

றிகல் வீடியோ
42/7, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
(73823)



வெளிமாவட்டப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் பாடசாலை செல்லாதவர்கள் ஆகியோருக்கான

### சுலப சிங்களப் பயிற்சி

திங்கள்/புதன் — காலை 9. 30
ஆரம்பம்: — திங்கள் 21. 02. 2000

TUITION AND SECRETARIAL SERVICE
46, Pirappankulam Lane, Vannarpannai,
(73815) Jaffna.



## கணக்குப்பிள்ளை தேவை

எமது ஆலயத்தில் வேலை செய்வதற்கு ஒரு கணக்குப் பிள்ளை தேவை. விரும்புபவர்கள் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினருடன் தொடர்பு கொள்ளவும். மேலதிக விவரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: கோண்டாவில், இணுவில், கொக்குவில் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் ஆசிமட அரசடி
விநாயகர் ஆலயம்.

(73802)



தேசிய மட்டத்தில் முதலாம் இடம்.

## மனதார வாழ்த்துகின்றோம்

யாழ். தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட தனி நடிப்புப்போட்டியில் முதலாம் இடம் பெற்று, பின்னர் தேசிய மட்டத்திலும் முதலாம் இடம் பெற்ற

### செல்வி விஜயரட்ணம் வினோதினி
(பன்னாலை — மல்லாகம்)

BMICH இல் 03—02—2000 "விருது" பெற்றதைப் பாராட்டி மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கனகரட்ணம் சிவானந்தன் குடும்பமும்
வேல்முருகு சிவானந்தம் குடும்பமும்
சிவானந்தன் தில்லைராஜன் குடும்பமும்.

'சிவசக்தி' இல்லம்',
பழைய தபாற் கந்தோர் வீதி,
சங்கானை. (73752)

# உதயன்

## பழைய கதை வேண்டாம்

இலங்கையின் இனப்பிரச்சினையை அரசியல்தீர்வு ஒன்றின் மூலம் மட்டுமே முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான, நேர்மையான தீர்வு கிட்ட வேண்டுமானால் முதலில் இரு தரப்புகளும் மோதல்களுக்கு முடிவு காண வேண்டும்.

அரசியல் தீர்வு காண்பது கடினமான செயற்பாடாக அமையும் என்பதால் துணிவும் தியாகங்களும் நிரம்பவும் தேவைப்படும்.

கடந்த புதன்கிழமை இலங்கைக்கு — கொழும்புக்கு — விஜயம் செய்திருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலே பெக் இந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சென்றுள்ளார்.

நோர்வே அமைச்சரின் முதலாவது கருத்து அனேகமாக மக்கள் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று தான். ஜனாதிபதித் தேர்தலில் அது ஊர்ஜிதமானது.

போர் நடைபெறுவதால் பணம் சம்பாதிக்கும் ஒரு சிறு கூட்டமே, இராணுவத் தீர்வு தேவை என்ற கருத்தை முன் வைத்து வருகிறது.

நோர்வே அமைச்சரின் இரண்டாவது கருத்து மனித நேயம் கொண்ட எல்லோராலும் வலியுறுத்தப்படும் ஒன்றாகும். பல தரப்புகளாலும் அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வருவதுமாகும். பேச்சுவார்த்தைகள் நடைபெறவும், தீர்வு ஒன்றை நோக்கிக் கால் பதிக்கவும் போர் நிறுத்தம் மிகவும் அவசியமும் அவசரமும் ஆனதாகும்.

அதனைப் போலவே அவர் தெரிவித்த மூன்றாவது கருத்தும் முக்கியமானதாகும். தீர்வு ஒன்றைக் காண்பதற்கு துணிவும் தியாகமும் அவசியம் தேவைப்படும். மிகக் குறிப்பாகத் தமிழர்களுக்கு அவர்தம் நியாயமான உரிமைகள் கிடைக்கக்கூடாது என்பதில் அக்கறையுள்ள தரப்புகள் பேச்சுவார்த்தைக்கும் நியாயமான தீர்வுக்கும் குந்தகம் விளைவிக்க நிச்சயம் வெகுண்டெழும். அவற்றைப் பொருட்படுத்தமால் செயற்படக் கூடிய மனத் துணிவு அரச தரப்புக்குத் தேவை.

தமிழர்களுக்கு அரை குறை உரிமைகளை வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதெல்லாம், சிங்களக் கடும் போக்காளர்கள் பல்வேறு இடையூறுகளைப் போட்டுத் தடுத்தார்கள். அவர்களைத் தாண்டிச் செல்லத் துணிவின்றி ஆட்சித் தலைவர்கள் விட்ட தவறுகளாலேயே இனப்பிரச்சினை இன்றைய பூதாகார வடிவம் எடுத்தது.

இம்முறையும் அத்தகைய தடைக்கற்கள் தீர்வுப் பாதையின் நடுவே கொட்டப்படும் என்பதற்கான எமிக்ஞை தான் வெள்ளியன்று கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்னால் கூடிய கூட்டமும், நடைபெற்ற ஆர்ப்பாட்டமும்.

இனப்பிரச்சினையை உள்விவகாரம் என்று கூறி, அதனை இருளில் போட்டு அடைக்கும் தன்மையுடன், இந்த விடயத்தில் நோர்வே சம்பந்தப்படக் கூடாது; தலையிடக் கூடாது; ஏற்பாட்டாளராகப் பணியாற்ற ஒப்புக்கொண்டதை வாபஸ் பெற வேண்டும். என்று காட்டுக் கூச்சல் போடப்பட்டுள்ளது.

நட் வொலே பெக்கின் கொழும்பு விஜயம் நல்ல ஆரம்பம் என்ற கருத்தை அடித்து விழுத்துவது போல, சிங்களக் கடும் போக்காளர்கள் செயற்பட்டுள்ளனர். பனங்காட்டு நரி போல இவற்றுக்கு அஞ்சாது பணிபுரியும் துணிவு அரசுக்கு வராவிடில், பழைய கதை யாகி விடும்!

# போதைப் பொருள் கடத்துவோரிடம் அரிய கலைப் பொக்கிஷங்கள் மீட்பு!

## கொலம்பியாவில் சம்பவம்

பொகோடா, பெப். 20

கொலம்பியாவின் தெற்குப் பகுதியில் போதைப் பொருள்களைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது நூறு மில்லியன் டொலர்கள் பெறுமதியான கலைப் பொருள்கள் மற்றும் விலை மதிப்பற்ற அரும் பொக்கிஷங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விலைமதிப்பற்ற பொருள்களில் பிரபல கொலம்பிய ஓவியர்கள் தீட்டிய ஓவியங்கள், நகைகளால் அலங்கரிக்கப்பட்ட சிற்பங்களும் அடங்கும்.

கொலம்பியா நகரத்தின் மையத்தில் உள்ள ஆடம்பர அடுக்கு மாடிக் கட்டடத்தில் இவை கைப்பற்றப்பட்டன.

இந்த வீடு கொக்கேயின் எனும் போதைப் பொருள்களைக் கடத்தும் கும்பலுடையது எனவும் தெரிவிக்கப்பட்டது. சோதனையின் போது போதைப் பொருள்களைக் கடத்திச் செல்லும் சர்வதேசப் பாதைகளைக் காட்டும் வரை படமும் கைப்பற்றப்பட்டது. (ஐ-க)

## யூகோ. அதிபர் அறிவிப்பு

கொசோவோவில் இருக்கும் ஐ. நா. சமாதானப் படையினர் மற்றும் ஐ. நா. அதிகாரிகளை அங்கிருந்து விலகிச் செல்ல வேண்டும் என யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசெவிக் அறிவித்துள்ளார்.

கொசோவோ நெருக்கடியை அடுத்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் யூகோஸ்லாவியா மீது மேற் கொண்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து கொசோவோவுக்கு ஐ.நா. அமைதிப்படை அனுப்பப்பட்டது. (க)

# புதிய வைரஸ் காய்ச்சல் உலகில் பரவுகின்றது

லண்டன், பெப். 20

ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் தற்போது புதிய வகைக் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வைரஸ் கிருமியினாலேயே இந்த நோய் ஏற்படுவதாகவும் பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் இஸ்ரேலிலும் இந்நோய் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோயினால் பிரான்சில்மட்டும் 50 லட்சம் பேரும் பிரிட்டணில் ஐந்நூறுபேருக்கு ஒருவர் என்ற ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிட்டனின் சில இடங்களில் இந்நோய்த் தாக்கத்துக்குள்ளான மக்கள் மருத்துவமனைகளில் நிரம்பி வருவதையடுத்து குறிப்பிட்ட சத்திர சிகிச்சைகளைக் கூட ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய மருத்துவமனைகளில் நோயாளிகள் அதிகரித்துள்ளதை அடுத்து பொது இடங்களில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. (க)

# டென்மார்க், சுவீடனிலும் 'யூறோ' நாணயப் புழக்கம்

பெர்லின், பெப். 20

டென்மார்க், சுவீடன் ஆகிய இரண்டு நாடுகளும் ஐரோப்பிய பொருளாதார மற்றும் நாணய நிதியத்தில் விரைவில் இணைந்து விடும் என இரு நாடுகளின் பிரதமர்களும் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய நாணயநிதியத்துடன் இணைந்து தமது நாட்டில் 'யூறோ' நாணயத்தைப் புழக்கத்துக்கு விடுவது குறித்து மக்களிடம் அனுமதி கேட்கும் பொருட்டு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் —

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு இடம்பெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் இந்தச் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் —

டென்மார்க்பிரதமர் போல் நைறுப்ஹஸ் முஷென் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனிக்கு விஜயம் செய்தபிரதமர் ஹஸ்முஷென் கீல் துறைமுக நகரில் ஜேர்மன் அதிபர் ஜெர்ஹாட் ஸ்ருடருடன் இணைந்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

ஐரோப்பிய 'யூறோ' நாணயத் திட்டத்தில் சுவீடனையும் இணைத்துக் கொள்வதுகுறித்து சுவீடன் அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டுப் பிரதமர் கொறன் பெர்சன் விரைவில் இது குறித்து இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார், (க)

## பிஹாரில் 6 பேர் பலி

பட்னா, பெப். 20

பீஹார் மாநிலத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற 2 ஆம் கட்டத்தேர்தல் வாக்களிப்பின் போது இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டனர் 12 பேர் வரை காயமடைந்தனர்.

இதேவேளை —

எதிரணிக் கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் இடம் பெற்ற மோதல்களை அடுத்து ஐந்நூறு பேர் வரை கைது செய்யப்பட்டனர். (க)

# 3 பாக். தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறு இந்தியா உத்தரவு

புதுடில்லி, பெப். 20

புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணிபுரியும் மூன்று பாகிஸ்தானிய அதிகாரிகளை நாட்டை விட்டு வெளியேறும்படி புதுடில்லி அறிவித்துள்ளது.

இவர்கள் தமது பதவிக்கு ஒவ்வாத வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறியே அவர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு இந்தியா பாகிஸ்தானைக் கேட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக இவர்கள் புதுடில்லியில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் இந்த முடிவு குறித்துக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் இந்த வெளியேற்றங்கள் நியாயப்படுத்த முடியாதவை என்று தெரிவித்தது.

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் தமது தலைநகர்களில் இருந்து தூதரக அதிகாரிகளை உளவு பார்த்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் துணை போதல் என்ற குற்றச்சாட்டின் பேரில் வெளியேற்றி வருவது தெரிந்ததே. (ஐ-க)

# தெற்கு சோமாலியாவில் கடும் பஞ்சம், பட்டினி!

லண்டன், பெப். 20

தெற்கு சோமாலியாவில் பசி பட்டினியால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியா நாட்டின் தென் பகுதியில் கென்யா மற்றும் எதியோப்பிய எல்லைக் கருகே உள்ள புலோ ஹவோ எனும் நகரத்திலேயே பசி, பட்டினி மற்றும் தாகத்தால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இங்கு நாள் ஒன்றுக்கு பத்துப் பேர் வீதம் இறப்பதாகவும்—இறப்பவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளும் வயோதிபர்களும் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் பூமி வரண்டு குளம் மற்றும் நீர் நிலைகளில் தண்ணீர் வற்றிப்போய் விட்டது. இதனால் இங்குள்ள மக்கள் பலர் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர்.

பஞ்சம் மற்றும் பட்டினியால் தெற்கு சோமாலியா மிகவும் மோசமடைந்து வருவதை அடுத்து அந்நாடு வெளிநாட்டு உதவிகளைக் கோரி உள்ளது. (ஐ-க)

## நாளை

மாசி 9
திங்கட்கிழமை
திதி: துதியை
முன்னிரவு 8.22 வரை.
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 10.50 வரை.
சுபநேரம்: 12.31—2.01
ராகுகாலம்: 8.01—9.31
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

இந்தத் துன்ப உலகில் மனத்திற்குச் சிறிது ஆறுதல் அளிப்பது உறக்கமே.

விக்தர் ஹ்யுகோ

## நாடாளுமன்றத் தேர்தலில்

# 3 கோடி 80 லட்சம் ஈரானியர் வாக்களிப்பு

தெஹ்ரான், பெப். 20

ஈரானில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த நாடாளுமன்றத்தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தேர்தல் ஈரானின் ஆறாவது நாடாளுமன்றத் தேர்தலாகும்.

290 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக மூன்று கோடிஎண்பது லட்சம் ஈரானியர் இத் தேர்தலில் வாக்களித்தனர்.

அதியர் முகமத் கதாமி தலைமையிலான சீர் திருத்த வாதிகளுக்கும் பழைமைவாதிகளுக்கும் இடையேயான ஒரு யுத்தம் என்று இத் தேர்தல் வர்ணிக்கப்படுகின்றது.

இதில் சீர் திருத்த வாதிகள் பெரு வெற்றியீட்ட வாய்ப்புள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். (ஐ - க)

## தேர்தல் ஆணையகம் மறுப்பு

மொஸ்கோ, பெப். 20

ரஷ்யாவின் தீவிர தேசியவாதத் தலைவர் விளாடிமிர் ஜெர்னோ விக்சி தனது சொத்து விவரங்களைத் தெரிவிக்கத் தவறியமைக்காக அதிபர் தேர்தலில் அவரை வேட்பாளராக அங்கீகரிக்க ரஷ்யத் தேர்தல் ஆணையகம் மறுத்து விட்டது.

ரஷ்யாவில் அதிபர்பதவிக்கு வேட்பாளராகப் போட்டியிடுபவர்கள் தங்களது சொத்து விவரங்களை அறிவிக்க வேண்டும்.

தன்னைத் தேர்தல் வேட்பாளராக அறிவிக்கத் தேர்தல் ஆணையகம் மறுத்ததை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப் போவதாக ஜெர்னோ விக்சி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி ரஷ்ய அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. (க)

## உலக அரங்கில்

# ஆசிரியத் தொழிலின் சமுதாய முக்கியத்துவம்

# தேய்வடைவதற்கு ஆசிரியர் மட்டும் காரணமா?

இலங்கையில் அரச தொழில்செய்பவர்களில்ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதியினர் தம்மை ஆசிரியர்தொழிலில் இணைத்துக் கொண்டுள்ளனர். காலத்திற்குக் காலம் வகை தொகையின்றி அரச தொழில் நியமனங்கள் என்பது ஆசிரியத் தொழிலை நோக்காகக் கொண்டே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் சமூகத்தின் பரந்ததும், விமர்சன ரீதியான பார்வையும் ஆசிரியர் தொழில் மீது ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாக ஆக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தம், நிர்வாகக் கட்டமைப்பு போன்றன சமுதாயப் பார்வையாளர்களுக்குப் புதிய புதிய முயற்சிகளாகத் தெரிந்த போதிலும் ஆசிரியர் மத்தியில் இவை சலிப்பு மிக்க அம்சங்களாக நோக்கப் படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் இன்று சமூகம் ஆசிரியர் தொழிலை நோக்குகின்ற வகையும் ஆசிரியர்கள் சமூகத்திற்கு தங்களை அர்ப்பணிக்கும் மனப்பாங்கும் இடைத் தொடர்பற்ற ஒரு நிலையை உருவாக்கியுள்ளது.

### சமூகத்தின் வகைகூறல் ( Accountability )

வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைத் தொகுதியைப் பற்றி பொது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். பாடசாலையோடு இணைந்த சமூகம் தம் சிறார்களை அங்கே அனுப்புவது சிறார்களின் கற்றலுக்கு அனுகூலமாக ஆசிரியர்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் அவ்வாறே ஆற்றப்படும் என்ற எதிர்பார்ப்புடன் ஆகும். ஆசிரியர்கள் ஆற்றும் பணிகளின் மூலம், அவர்களின் பொறுப்பிலுள்ளவகுப்புகளில் கற்கும் மாணவர்கள் ஏதாவது சேவையைப் பெறுகின்றனர். அச் சேவையைப் பற்றிய எதிர்பார்ப்பை மாணவர்களைப் போலவே பெற்றோர்களும் சமூகத்தில் சில பிரிவினரும் கொண்டுள்ளனர். அவ்வாறான எதிர்பார்ப்புகளைக்கொண்டவர்கள் யாவரும்சேவை பெறுவோர் எனப் படுவர். சேவை பெறுவோர்களால் ஆசிரியருக்கு - தமது சொந்த நிதியிலிருந்தும் தமக்காக செயல்படும் அரசின் நிதியிலிருந்தும் அவருடைய சேவைக்காக ஊதியம் வழங்கப்படுகிறது. ஆசிரியருக்கு அரசினால் வழங்கப் படும் ஊதியத்தைத் தமது நிதியெனச் சேவை பெறுவோர் கருதுகின்றனர்.

என்வே சேவை பெறுவோர் தமது முதலீட்டிற்கு ஈடான சேவையை ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உரிமை பற்றி விழிப்புடன் உள்ளனர். ஆசிரியர்களுக்குச் சேவை பெறுவோர் மீதுள்ள கடப்பாடு வகைகூறல் எனக் கருதப் படுகிறது. எனவே அவரிடம் கற்கும் மாணவர்களின் திறமைகளையும் பலவீனங்களையும் இனங்கண்டு திறமை குன்றியவர்களைப் பொருத்தமான பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுத்தியும், திறமையுள்ள மாணவர்களின் திறமையை மேலோங்கச் செய்ய மேலதிக செயல்களில் ஈடுபடுத்தியும் ஆசிரியர் செயற்படுவார் என சேவை பெறுவோர் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு நிகழாவிடின் அவர்கள் ஆசிரியரின் கடமைகளைப் பற்றிப் பகிரங்கமாக வினாவுவர். இதனால் கடமை புரியும் ஆசிரியர்கள் வகைகூறல் தொடர்பாக நிதமும் விழிப்புடன் கடமை செய்ய வேண்டியுள்ளது.

இன்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆசிரியர் மேல் சமூகம் வைத்திருந்த மதிப்பும் உயர்ச்சி மனப்பாங்கும் அண்மைக் காலங்களில் வெகுவாக அருகி வருவதையே காண முடிகின்றது. இந் நிலைக்குப் பெரிதும் காரணமாய் அமைந்தது எமது நாட்டுக் கல்வி முறைமை ஆகும். குறிப்பாக இலங்கையின் ஒரு சில உயர் படிப்புக்களை விடவும் பல வகைப் பட்டப்படிப்பின் பின்னர் கற்பவர் மத்தியில் அவரது எதிர்காலத் தொழில் பற்றிய திடமான முடிவுகளை எடுக்க முடியாத நிலையுள்ளது. பல்வேறு இலக்குகளுடன் கல்வி பயிலுபவர்கள் தமது சுய விருப்பத்திற்குரிய இலக்கைச் சரிவர அடைய முடியாதபோது இறுதியில் தொழில் அந்தஸ்து என்கின்ற சமூக கௌரவத்திற்காக ஆசிரியர் தொழிலை நாடி வருகின்றனர். இது தவிர்க்க முடியாத சமுதாயச் சிக்கல் ஆகும்.

### ஆசிரியர் தொழில் பற்றிய சமூக நோக்கு

குறைவான சம்பளமானாலும் நிறைவான விடுமுறை காலங்களை பெரும் சலுகைகளாக நோக்கிஇத்தொழிலை நோக்கி பலர் படை எடுக்கின்றனர். அண்மைக்காலங்களில் ஆசிரியர் நியமனங்கள் பெற்றுக் கொண்டவர்களில் பலர் ஏனைய அரச திணைக்களப் பதவிகளை இந்த சுகபோகத்திற்காக துறந்தவர்கள். உண்மையில் மேற்குலக நாடுகளில் பொருத்தமான பயிற்சி பெற்ற ஆசிரியர் அல்லாத எவருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதில்லை. ஆனால் எமது நாட்டில் வேலையற்ற இளைஞர்களின் விரக்தி நிலையைக் காரணம் காட்டி தேர்தல் கால வாக்குறுதி போல் அள்ளித் தெளிக்கின்ற விடயமாக ஆசிரியர் நியமனம் கடைத் தெருவில் விலை கூறி விற்குமளவிற்கு புறந்தள்ளப்பட்டுள்ளது. தூரத்தில் உள்ளவனுக்கு பருகு நீர் போல் காட்சி தரும் கானல் நீர் போல ஆசிரியத் தொழில் சமூகத்துக்கு இலகுவான காரியங்களாகப் படுவது தான் வேதனைக்குரியது.

த. ஸ்ரீமுரளி

(தொடரும்)

## சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# முதியோரைப் பேணும் போதே முழு மனிதமும் முழுமை பெறும்

இன்று நாம், புதிய புதிய பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அவற்றில் ஒன்று குறிப்பிட்ட ஒரு தொகையினர் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட சூழலிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதிலும் குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், நீண்ட காலமாக நோயுற்றவர்கள் கவனிப்பாரற்று, கைவிடப்பட்ட நிலையினையே காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்குக் காரணங்களாக 'இவர் இருந்தும் என்ன பிரயோசனம்?', 'பிரயோசனம் இல்லாவிட்டால் இருந்து என்ன பயன்?', 'காலம் வந்தால் போய்ச்சேர வேண்டியதுதானே!...' என்று வெறுமனே 'லாபம்' தரக் கூடிய நபர்களை மட்டும் ஏற்றுக்கொண்டு வாழுகின்ற ஒரு 'சந்ததி' யின் காலப்பகுதியிலே நாம் காலத்தைக் கடத்திக்கொண்டு இருக்கின்றோம். ஆம்! முதுமை எம்மவர்க்கு முட்டுக்கட்டையாகி விட்டது போலும்!... வயது முதிர்ந்தவர்கள் எமக்குப் பாரமாகி விட்டனர்போலும்!...நோயுற்றவர்கள் பிரயோசனம் தராத சுமையாகிவிட்டனர் போலும்!...

சமுதாயத்தின் நோக்கிலே இவர்கள் தேவையற்ற, தேவையில்லாத ஒரு பகுதியாகிவிட்டனர். தேடுவாரற்ற வேண்டாப் பொருள்களாகி விட்டனர்!... இதனால், இவர்கள் வெறுப்பையும் விரக்தியையும் சலிப்பையும் நாளாந்தம் சந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

கடவுள் நல்லோர் மேலும் அதேவேளையில், தீயோர் மேலும் கதிரவனை உதிக்கச் செய்கின்றார். நேர்மையுடையோர், நேர்மையற்றோர் மேலும் மழை பொழியச்செய்கின்றார். (மத் 5: 45) என்று நற்செய்தியிலே படிக்கின்றோம். இப்படியாக இறைவனின் இரக்கம் அனைவரையும் வந்தடைகின்றது. நம் எல்லோருக்கும் வாழ்வளிக்கின்றது. ஆனால் நாம் மட்டும் பலமுள்ளவர்களை ஏற்றுக்கொண்டு பலவீனர்களை வெறுக்கின்றோம். வலுவுள்ளவர்களை வரவேற்றுக்கொண்டு வலுவற்றவர்களை விரட்டுகின்றோம்.

இன்றைய இறை வார்த்தையில் (மாற் :40—45) தோன்றுகின்ற தொழுநோ

ஞாயிறு நற்பிரசாதம்

யாளன் தனது உடல் வருத்தம் ஒருபுறமிருக்க, உளவேதனையால் சோர்ந்து மனமுடைந்திருக்கின்றான்; 'தொழுநோயால் பாதிக்கப் பட்டவன் கிழிந்த உடை அணிந்து, தலை வாராமல் 'தீட்டு தீட்டு' எனக் குரலெழுப்ப வேண்டும்'. (லேவி 13:45). இந்நோயுற்றவருக்கும், அன்றைய சமுதாயத்திற்கும் எவ்வித தொடர்போ, 'தொடுதலோ' இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. இவனும் மனிதன், வாழ வேண்டியவன் என்பதை மறுத்து வாழ்ந்தனர் அன்றைய மனிதாபிமானிகள். ஏன் உயிர் வாழுகின்றபோது தமது பெற்றோரை, முதியவரைக் கவனிக்காதவர்கள் இவர்கள். இறந்த பின்னர் 'மரணவீட்டைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்' என்று முண்டியடிப்பவர்கள் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அருட்திரு. செ.அன்புராஜ்.அ.ம.தி.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை ஆழிக்குள் படித்தெடுத்த முத்துக்கள்

★ **சங்கீதம்** — சங்கீதத்துக்கு ஆதியில் நாட்டியம் என்றே பெயர். வாய்ப்பாட்டும் பக்கவாத்தியங்களும் சங்கீதத்தின் அம்சங்கள். சாரங்கதேவர் நாட்டிய வேதத்தில் இருந்து ''சங்கீதரத்நாகரம்'' என்ற சாஸ்திரதைச் செய்தார். அதன் பிறகே ''சங்கீதம்'' என்ற பெயர் பரவலாயிற்று. பக்கவாத்தியங்களுடன் கூடிய சங்கீத நாட்டியம் களியாடல்களிலேயே முக்கியமானது என்று வேதங்கள் கூறுகின்றன. பாணினி தனது வியாகரணத்தில் நாட்டிய சூத்திரங்களைப் பற்றி விவரிக்கிறார். இவற்றினூடாக சங்கீதத்தில் நாட்டியமே முக்கியமானதென அறிகிறோம். 12 வருடங்கள் சங்கீதம் அப்பியாசிக்க வேண்டுவது அவசியம். சங்கீத அப்பியாசத்தின் போதே அர்த்த பாவத்துடன் சாகித்ய கவனத்துடன் பயில முடியும் —

— மாங்குடி சிதம்பர பாகவதர் (சென்னை சங்கீத வித்வ சபையின் பதினொராவது மாநாட்டில்)

★ **கவிதை** - மேலான கற்பனைகளைக் காட்டி நிற்பது கவியாகும். கவியென்பது ஆக்கியோன் நெஞ்சத்து நிறைவுடைமையை வெளிப்படுத்துகிறது.

இறைவன் அருளால் சிந்தையில் நிறைவு பெறுவதே மனித வர்க்கத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். கவிஞன் அளிக்கும் காட்சிகளும் சம்பவ குறிப்புக்களும் மக்களின் மனம் உலக போகத்தில் உழலாமல் ஒருவழிபடச் செய்கின்றன. கவித்திறன், விடயங்கள் காரணகாரியங்களால் ஒன்றை ஒன்று தழுவி நிற்பதை நன்கு விளக்குகிறது. வாழ்க்கையில் நொந்து வருந்தும் ஒருவனுக்குக் கவியின்பம் புத்துயிரளித்து ஆறுதலளிக்கிறது. லௌகிக மக்களிடம் காணப்படாததும் நித்தியமும் நிர்மலமுமான ஒரு வஸ்துவைத் தேடும் உயரிய மன உணர்ச்சியைக் கவிதை காட்டி நிற்கிறது — அறிஞர் குமரகுருபர ஆதித்தர்

★ **விடியல் நீராடல்** — ஒரு நாளேனும் தப்பாமல் அதிகாலை 4மணிக்கு விழித்துக் கொண்டு மலஜல விமோசன் ஆனதும் நீராட வேண்டுமென்பது சுவாமிகளின் சட்டத்தின் சிறப்பான கொள்கை, காலை ஐந்துக்குள் நீராட்டத்தை முடித்து விட வேண்டும். நாலுக்கும் ஐந்துக்கும் உள்ள இடைக்காலத்தில் தண்ணீருக்கு ஓர் அருமையான சக்தியிருப்பதாகச் சுவாமிகள் கூறுவார்கள். அந்நேரத்தில் தண்ணீர் கொண்டு உடல் மீது கொட்டிக் கழுவினால் உடம்பில் உள்ள நரம்புகள் கெட்டியாகின்றன. மூளை கூர்மையடைகிறது. இரத்தம் பரிசுத்தமாகிறது என்று சொல்வார்கள். மற்றநேரம் நீராடுவதால் முழுப்பயன் கிட்டாது போவதோடு ஏதாவது கெடுதிகளும் வரலாம். விடியல் நீராட்டத்தால் தீது எதுவும் இல்லை. உள்ள நோய்கள் நீங்கும். உடலும் ஆ[illegible] அடையும். விடியல் நீராடல் போற்றப்படவேண்டும். இது ஒன்றிருந்தால் [illegible] மற்றவையெல்லாம் ஒவ்வொன்றாய்க் கை கூடும்.

தலைக்குக் கொட்டிக் கொள்ளாமல் நீராடுவது நீராட்டமாகாது என்பது சுவாமிகள் எண்ணம். மேல்நாட்டு முறையில் வைத்தியம் செய்பவர்கள், ஒருவருக்குக் கடும் காய்ச்சல் வந்தால் கொதிப் பெடுத்திருக்கின்ற உடலில் வேறுபகுதிகளில் பனிக் கட்டியை வைத்து வெம்மையைத் தணிக்க முயலாமல், உறை நீர்க்கட்டியைப் பையில் இட்டு தலை மீதேயே வைக்கிறார்கள். தலையிலே உடம்பில் உள்ள நாடிகள், நாடிகளின் முடிச்சுக்கள் திரண்டு கிடப்பதால் அவ்விடத்தைக் குளிர்வித்தால் உடம்பு முழுவதும் குளிரும் என்ற உண்மையை அறிந்து அப்படிச் செய்கிறார்கள்.

— ஸ்ரீ இராயப்பட்டி சுவாமிகளின் அருளுரைகள் அடங்கிய ''வழி காட்டும் வான் பொருள்'' என்ற நூலில் சைதாப்பேட்டை இராமலிங்க முதலியார்.

கண்டெடுத்து வழங்குபவர்:
கலைப்பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை

# விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டுக்கு நிரந்தர மார்க்கம் காணப்பட வேண்டும்

## பயிர்ச்செய்கை நிலம் குறுகுகிறது; முழுநேர விவசாயிகளும் குறைவு

"வட இலங்கையைப் புனரமைப்பு, புனரபிவிருத்தி செய்வதற்கான திட்டம்" என்ற தலைப்பிலான மூன்று நாள் பயிலமர்வு கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

அந்தப் பயிலமர்வின் இரண்டாம் நாள் நிகழ்வின்போது "யாழ்ப்பாணத்து விவசாயக் குடும்பங்களின் நலன் கருதிய விவசாய மீளமைப்பு" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் தொகுப்பு இது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் சமாதானச் சூழல் நிலவுவதாகக் கருதி புனர்நிர்மாண, மீள்க்குடியமர்தல் வேலைகள் முடுக்கி விடப்பட்டு இருந்தன இதன் பலனாக சர்வதேச நிறுவனங்கள் பெருந்தொகையான பணத்தை புனருத்தாரண வேலைகளுக்காக முதலீடு செய்திருந்தன. ஆனால் இப்போது அவை விழித்துவிட்டதுபோலத் தென்படுகிறது. இது தமிழ் மக்களாகிய எங்களுக்கு ஒரு நிரந்தர நிம்மதிக்கு வழிகாட்டுமா? அதே வேளையில் நோர்வே அமைச்சரின் முயற்சிகள், இந்த ஆண்டில் தென்றல் வீசச் செய்யுமா?

இவ்வாறான விவாதங்களுக்கு மத்தியிலும் எமது பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முக்கிய துறையாக இருக்கின்ற விவசாயத்தை மறக்க முடியாதுள்ளது. இன்று இது பல புதிய பரிணாமங்களைக் கொண்டிருந்தாலும், விவசாயப் பெருமக்களின் நிலையில் இருந்து நோக்கினால் நாம் எங்கே போய்க் கொண்டு இருக்கின்றோம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிய வரும்.

எமது குடாநாட்டின் குடியியல், காலநிலை சிறப்பம்சங்களுடன் எமது விவசாயப் பெருமக்களின் ஊக்கமும் கடின உழைப்பும், திறமையும் சேர்ந்ததனாலேயே ஒரு காலத்தில் மலைநாட்டில் மட்டுமே உற்பத்தி செய்யலாம் எனக் கருதப்பட்ட மரக்கறிப் பயிர்களான லீக்ஸ், கரட், பீற்றூட், போஞ்சி போன்ற பல பயிர்கள் வருடம் முழுவதிலும் எமது மண்ணில் பயிரிடப்படுகின்றன. எமது நாட்டின் விவசாயிகளே வரண்ட வலயத்தில் உருளைக்கிழங்குப் பயிரினைப் பயிரிட்டுக்காட்டியவர்கள். இதனை விட இலங்கையில் திராட்சைப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தி இதனை நாட்டின் பல பகுதிகளிலும் விற்று இலாபம் ஈட்டினர். விவசாயத் தொழில் நுட்பத்தைப் பொறுத்தளவில் அவர்களிடமிருந்து இன்னும் நாம் கற்கவேண்டியவை நிறைய உள்ளன. இவ்வாறான எமது விவசாயிகளிடத்து பலம் காணப்படுகின்றதே அன்றி பலவீனங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக அவர்கள் மத்தியில் அச்சமும் அவநம்பிக்கையும் துளிர்விடுவதையே அவதானிக்க முடிகிறது.

நாம் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபடுவதால் எமது சமூகப் பொருளாதாரத்தை உயர்த்த முடியுமா? என்ற கேள்வி எழுந்து நிற்கிறது. 1990ற்கு முற்பட்ட காலத்தில் சிறிய நிலப்பரப்பில் செறிவாகப் பயிரிட்டு இலாபம் ஈட்டி அதன் மூலம் ஒரு கல்வியறிவு படைத்த சமுதாயத்தை உருவாக்கிய விவசாயப் பெருமக்களின் பரம்பரையாக வந்த இவர்கள் எழுப்பும் இக்கேள்வி யார் காதுகளிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

ஒரு நாட்டின்விவசாய அபிவிருத்தி என்பது விவசாய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பால் மட்டும் பெறப்படுவதில்லை. அந்த உற்பத்தியை நியாயமான விலையில் சந்தைப்படுத்தி இலாபத்தை ஈட்டுவதன் மூலமே விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். இந்நிலையில்தான் இங்கே விவசாய அபிவிருத்தி நடந்துள்ளது எனக் கூறலாம். இத்தகையதொரு நிலைமை 1970 இன் ஆரம்பகாலம் தொட்டு நடுப்பகுதி வரை யாழ். குடாநாட்டில் இடம்பெற்றதை யாரும் மறந்துவிட முடியாது.

### முழுநேர விவசாயிகள் குறைவு

இன்றைய நிலைமைகளில் முழுநேர விவசாயிகள் யாழ்ப்பாணத்தில் அருகி வருகின்றனர். 1986 இல் 76, 238 குடும்பங்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டு இருந்தன. ஆனால் 1997 இல் 67, 596 குடும்பங்களே விவசாயத்தில் நாட்டம் கொண்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் சுட்டுகின்றன. 1986இல் மொத்த நிலப் பரப்பு 44 24வீதமும் 1997 இல் 38. 46 வீதமும் விவசாய நடைமுறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.

எனவே குடாநாட்டில் இப்போது விவசாயத்தை மேம்படுத்துவதற்காக விவசாயத்திணைக்களம், விவசாய சேவைகள் திணைக்களம், அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவை ஆற்றி வரும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. குடாநாட்டின்விவசாயப்பெருமக்களின் அங்கலாய்ப்பைத் தீர்ப்பதற்கு விவசாயத்தை மீளப் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும் என்பது இப்போது எல்லோராலும் உணரப்படுகின்ற விடயமாகும். இதற்குப் பின்வரும் கருத்துக்கள் வழி சமைக்கும் என்பது திண்ணம்.

### தரமான விதை உற்பத்தியும் சேமித்தலும்

சுய விதை உற்பத்தி மூலம் உற்பத்திச் செலவு குறைந்த சூழலுக்கு இசைவாக்கப்பட்ட இனங்கள் செய்கை பண்ணப்பட வேண்டும். விதைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்குமாகக் குடாநாட்டில் தகுதி வாய்ந்த வல்லுநர்களைக் கொண்ட விதை உறுதிப்படுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

செல்வி மனோகரி பரம்சோதி
M. Sc. Bio Technology (2 nd year), யாழ்.பல்கலைக்கழகம்

# அன்பு என்ற வித்து விருட்சமாகி சமாதான நிழல் பரப்பட்டும்

மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் அவன் பிறந்ததும் பல பிணைப்புகள் ஏற்படுகின்றன. இந்தப் பிணைப்புகளில் இருந்து விடுபடமுடியாமல் அவன் 'பிறக்கும் போதும் அழுகின்றான். இறக்கும் போதும் அழுகின்றான்.' அவனிடத்திலேஅவா, ஆசை, பற்று, பாசம் என்பன வளர்ந்து சுயநலமும் தன்னெடுப்பும் ஓங்கி நிற்கின்றன. இதனால் எழும்...... மனக்கிலேசங்களால் அவன் மற்றவர்களை அடக்கியாளவும் பகைத்துக் கொண்டு புறம் போக்காக நடக்கவும் முனைகின்றான். இந்த முனைப்பினால் போட்டி பூசல்களும் பழிபாவங்களும் ஏற்படுகின்றன. சமாதான சகவாழ்வு கெட்டு ஒவ்வொருவரும் மற்றும் ஒவ்வொருவரையும் எதிரியாக நினைக்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் தேடிநாம் அலைகிறோம். நாம் தேடி அலையும் இந்தச் சமாதானம் வானத்திலிருந்து எமக்கு வரப்போகிறதா? இல்லவே இல்லை. நமது ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தான் சமாதான உணர்வு சுடர்விட்டு மேலெழுந்து வரவேண்டும். கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளத்தோடு பிறக்கும் நாம் குடும்பம், சூழல் என்பவற்றால் பாதிக்கப்பட்டு இயற்கையான நல்லுணர்வுகளை மறந்து விடுகின்றோம் — "எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கேஎனக்கோர்இடம்வேண்டும்! என எமக்குள்ளே நாமே கேட்கின்றோம்.

'எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க' என்று சைவம் சாற்றுகின்றது. 'உன்னைப் போல் அயலவனையும் நேசி' என்று கிறிஸ்தவம் போதிக்கின்றது. "எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்து' எனப் பௌத்தம் பறைசாற்றுகின்றது. சகோதரத்துவத்தின் மகிமையை இஸ்லாம் பரப்புகின்றது. எல்லாமாக சமரச சன்மார்க்கப் போதனைகளை எல்லா மதங்களும் எடுத்து இயம்புகின்றன —

இயற்கையிலே தோன்றிய ஓர் அறிவு உயிர்கள் தொடக்கம் ஐந்தறிவு பெற்ற உயிர்கள் அனைத்தும் தத்தமக்குள் எது வித வேறுபாடுகளுமின்றி இயற்கை வழி வாழுகின்றன. ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதன் மட்டும் குழப்பத்தோடும் குதர்க்கத்தோடும் அமைதிஇன்றிவாழ்கின்றான். பகுத்தறிவு என்பது நன்மை தீமைகளைப் பகுத்து அறிந்து நன்மை வழி நடப்பதற்கு இயற்கை தந்த மூளை வலுவாகும். ஆனால் நாமோ நாடு, இனம், மதம், சாதி, சமயம் எனப்பகுத்து மறைவாக எமக்குள்ளே போட்டி பொறாமைகளை வளர்த்து, அமைதியான வாழ்வைக் குலைத்துப் பூசல்களைப் பெருக்கி, சமாதான சக வாழ்வை இழந்து வாழ்கின்றோம்.

சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை என்பவற்றை மறந்து 'கெட்ட போரிடும் உலகத்தை' உருவாக்கி உள்ளோம். 'இதனை

(8 ஆம் பக்கம் பார்க்க)

ப. நிர்சாந்தினி
ஆண்டு 10
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி

## 'உதயன்' அனுசரணையுடனான 'யுனெஸ்கோ' கட்டுரைப் போட்டி

'யுனெஸ்கோ' ஆதரவில் பாடசாலைகள் ஊடாக நடத்தப்படும் கல்வி மூலம் சமாதானம் என்ற கருத்துப் பகிர்வை முன்னெடுக்கும் வகையில் 'உதயன்' அனுசரணையுடன் இடம்பெறும் கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளில் இதுவும் ஒன்றாகும். பெப்ரவரி மாதத்துக்குரிய சிறந்த கட்டுரையாக இது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதத்துடன் இக் கட்டுரைப் போட்டி பூர்த்தியாகிறது. சிறந்த கட்டுரைகள் ஆறும், மூவர் கொண்ட நடுவர் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுப் பரிசுக்குரிய மூன்று கட்டுரைகள் தெரிவாகும்.

பரிசு பெறுவோரின் விவரமும், பரிசளிப்புக் குறித்த அறிவிப்பும் பின்னர் அறிவிக்கப்படும்.

## மாதத்தின் சிறந்த கட்டுரை

● நீண்ட நாள் பகை காரணமாகத் தன் எதிரியைக் கொலை செய்த ஓர் இளைஞன் அவனுடைய உடலைக் கிழித்துச் சில உறுப்புக்களையும் சாப்பிட்டானாம்!

★ ஆத்திரக்காரனுக்கு இரத்தப் பசி!

● மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாகப் பொது மக்கள் புகார் செய்கின்றனர்.

★ மின்னலைப் போல திடீரென்று வந்து திடீரென்று நிற்பதனால் தான் அதற்கு 'மின்' சாரம் என்ற பெயரே ஏற்பட்டதோ?

● நிலக்கரி பேர வழக்கில் ஜெயலலிதாவை நீதி மன்றம் விடுவித்ததை எதிர்த்துத் தமிழக அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது!

★ தன் முகத்தில் கரி பூசப்பட்டுவிட்டதாகக் கருதியதால் தான் தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுக்கிறதோ?

● உலக அரங்கில் இந்தியாவின் மதிப்புக் குறைந்து விட்டதெனச் சோனியா காந்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

★ அடிமனத்திலுள்ள ஆசை தான், இப்படி ஓர் அறிக்கையாக வெளிவந்திருக்கிறதோ...?

## எதிரொலி..

- இடியன் -

● களுத்துறைச் சிறைச்சாலையிலே தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட சமயம், சில அதிகாரிகள் பார்த்துக் கொண்டு நின்றனராம்!

★ இப்போதைய சூழ்நிலையில் அவர்களும் சேர்ந்து தாக்காமலிருந்ததே ஓர் அதிசயம் என்றல்லவா சொல்ல வேண்டும்!

● இலங்கை அரசின் தீர்வுத் திட்டத்தில் பாரதூரமான குறைபாடுகள் இருப்பதாக வரதராஜப் பெருமாள் கூறுகின்றார்.

★ தன்னுடைய கூற்றை அரசு பாரதூரமாக எடுக்காது என நினைத்துத் தான் அவர் கூறியிருப்பாரோ?

● இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் இணைந்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என அரசு மீண்டும் அறிவித்துள்ளது!

★ மன்னிப்புக் காலத்தை நீடித்து மனக்காப்பையும் மரண பயத்தையும் ஏற்படுத்துவதைவிட, போரை முடிவுக்குக் கொண்டு வருவது புத்திசாலித்தனமானது என அரசு இன்னமும் உணரவில்லையே!

● யாருமே எதிர்பாராத வகையில், ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வந்து, வரவு செலவுத் திட்டத்தைத் தானே நேரடியாகச் சமர்ப்பித்தார்!

★ இனிமேல் ஜனாதிபதியின் 'வரவும் செலவும்' (வருவதும் செல்வதும்) எதிர்பாராத முறையிலே தான் அமையும் என்பதற்கு இது முன்னோடியோ?

# 16 பாடசாலைகளைப் புனரமைக்க
# ஜேர்மன் தொண்டு நிறுவனம் நிதி

வடமராட்சி, பெப். 20

யாழ்.குடாநாட்டில் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட 16 பாடசாலைகளை இவ்வாண்டில் புனரமைப்புச் செய்வதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வடக்கு — கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் அனுசரணையுடன் இரண்டு கோடியே நாற்பது லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

பாடசாலைகளின் விவரமும் ஒதுக்கப்பட்ட நிதியும் வருமாறு—

★ பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 30 லட்சத்து 23 ஆயிரம் ரூபா.

★ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்— 19 லட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபா.

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி— 18 லட்சத்து 68 ஆயிரம் ரூபா.

★ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி— 11லட்சத்து 85 ஆயிரம் ரூபா.

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி— 6 லட்சத்து ஆயிரத்து 500 ரூபா.

★ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை— 10 லட்சத்து 96ஆயிரத்து 500 ரூபா.

★ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி — 10 லட்சத்து 49 ஆயிரம் ரூபா.

★ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்— 29 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய்.

★ சரஸ்வதி நாகேஸ்வரி மகாவித்தியாலயம்— 9 லட்சத்து 77 ஆயிரம் ரூபா.

★ யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலயம் — 5 லட்சத்து 57 ஆயிரம் ரூபா.

★ நல்லூர் தெற்கு விக்கினேஸ்வராக் கல்லூரி— 8 லட்சத்து 11 ஆயிரம் ரூபா.

★ இடைக்காடு மகாவித்தியாலயம்— 9 லட்சத்து 89 ஆயிரத்து 500 ரூபா.

★ யாழ். இந்து மகளிர் கல்லூரி — 5 லட்சத்து 14 ஆயிரத்து 500 ரூபா.

★ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்— 7 லட்சம் ரூபா.

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி— 8 லட்சத்து 7 ஆயிரம் ரூபா.

★ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி— 10 லட்சம் ரூபா.

இப்புனரமைப்பு தொடர்பாக யாழ்.குடாநாட்டிலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஏற்கனவே விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களால் எதிர்வரும் 29ஆம் திகதி அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-173-118)

# மதகுருமாருக்கு பஸ்களில் ஆசனங்கள் ஒதுக்கீடு

வடமராட்சி, பெப். 20

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்வண்டிகளில் மதகுருமார்களுக்கும் வலது குறைந்தோருக்கும் தனியான ஆசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சாரதி ஆசனத்துக்குப் பின் உள்ள ஒரு சில ஆசனங்கள் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளதோடு, அதற்குரிய அறிவித்தல்களும் மும்மொழிகளிலும் குறிப்பிட்ட ஆசனங்களுக்கு மேல் உள்ள பஸ் வண்டியின் கூரையில் எழுதப்பட்டுள்ளன.

அத்துடன் பஸ்வண்டிகளின் பின் ஆசனப் பகுதிக் கூரையில் 'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது'. 'டிக்கட் இன்றி பயணம் செய்தால் கட்டணத்தின் இரு மடங்கும் 200 ரூபாவும் அபராதமாகச் செலுத்த வேண்டும்' என்ற அறிவுறுத்தல்களும் எழுதப்பட்டுள்ளன. (ஐ-173)

# இலவச ஆங்கில வகுப்பு

பளைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புகள் பளை இளைஞர் சேவைகள் பிரதேச சம்மேளனத்தினால் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தத்தமது பிரிவு இளைஞர் கழகங்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு சம்மேளனத் தலைவர் செ. நிமலரூபன் அறிவித்துள்ளார். (ஐ-117)

# அதிகரிப்பு

வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம் மினிபஸ், தட்டிவான் பயணக் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவையிலீடுபடும் மினிபஸ் வண்டிகளிலும் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம், சாவகச்சேரிக்கு சேவையிலீடுபடும் தட்டிவான்களிலும் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை பஸ்கட்டணங்களே முன்னர் அறவிடப்பட்டு வந்தன

(ஐ - 173)

## விவசாயிகளின்....

(7 ஆம் பக்கத் தொடர்)

தல் நிலையம் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் விதைகளைச் சேமிப்பதற்கு, குளிர் சேமிப்பு பகுதியும் உருவாக்கப்படுவது அவசியம். இதன் மூலம் குடாநாட்டின் நீண்ட கால விதைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்–

சந்தை வசதி

விவசாயப் பெருமக்கள் சிறந்த இலாபத்தைப் பெற பின்வரும் வழி முறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அ. விவசாய உற்பத்திகளை வகைப்படுத்தி, தகுந்த நியாயமான கட்டணத்துடன் குடாநாட்டுக்கு வெளியே கொண்டு செல்வதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆ. பதனிடுதல், பாதுகாத்தல், தரப்படுத்தல் போன்ற தொழில் நுட்பம் வாய்ந்த தொழில் வசதிகளை மேம்படுத்தல்.

இ. உள்நாட்டு சந்தைகளுக்கிடையே சிறந்த தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் குடாநாடு முழுவதும் சீரான விலை நிர்ணயத்தை ஏற்படுத்தல்.

ஈ. விவசாயிகள் அடங்கிய நிறுவனங்கள் சந்தைப்படுத்துவதில் முழு அதிகாரத்தையும் வைத்திருப்பதற்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

உ. கணனி மயமாக்கப்பட்ட விவசாய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்.

இது போன்ற நடவடிக்கைகள் விவசாயம் பற்றிய முழுத் தரவுகளையும் உடனுக்குடன் அறிய வகை செய்வதோடு சந்தை வசதிகளையும் மேம்படுத்தும்.

ஊ. சந்தை முகாமைத்துவம் பற்றிய அறிவை விவசாய மக்களிடையே ஏற்படுத்துதல்.

மண வளத்தைப் பேணல்

அதிகளவு விளைச்சலைப் பெறுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய விவசாய இரசாயனங்களின் பாவனை நீண்டகால கட்டத்தில் தீமையாகவே முடிகின்றது. உதாரணமாக மண் வளம் குறைதல், எதிர்ப்பினங்கள் உருவாகல், செலவு அதிகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே எல்லாவற்றுக்கும் பாதுகாப்பாக அமையக்கூடிய சூழலியல் பண்ணைப் பயிர்ச்செய்கை மூலம் (Ecological Farming Methods) உற்பத்திச் செலவைக் குறைப்பதுடன் மண் சூழல், மனிதன், உயிரினங்கள் எல்லாவற்றையும் பாதுகாக்க முடியும். சூழலியல் பண்ணையில் பின்வரும் அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

1. உயிர்ப்பூச்சி கிருமிநாசனி பாவனை.
2. சேதன உரங்களின் பாவனை.
3. உயிரில் உரங்களின் பாவனை.
4. ஒன்றிணைந்த செயற்பாடுகள்.
5. உயிரியல்பீடை கட்டுப்பாடு.
6. சுழற்சி முறையில் இலெகுமினேசேகுடும்பத்தாவரப் பயிர்ச்செய்கை.

இதனால் இரசாயனப் பாவனைகள் பெருமளவு குறைக்கப்படும்.

தொழிற்பாடான மக்களின் பரம்பல்

குடாநாட்டின் பெருமளவு தொழிற்பாடான மக்கள் நாட்டு நிலைமை காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர் இங்கு மிஞ்சி நிற்பவர்களில்கல்விசார்பெரியவர்களும்அரசாங்க ஊழியர்களுமே அனேகர். ஆனால் வேலையில்லாத பட்டதாரிகள், விதவைகள், பெண்களின் பரம்பல் செறிவாகவே உள்ளது. எனவே விவசாயத் தொழிற்றுறைகளை (Agro based Industries) ஏற்படுத்துவதன் மூலமும் குடாநாடு முழுவதிலும் அதற்கான சரியான பயிற்சிகளை வழங்குவதன் மூலமும் இச்செறிவுப் பரம்பலை தொழிற்பாடுடையதாக்க முடியும்.

இலங்கையின் ஒரேயொரு தொழில்நுட்ப நிறுவனமான ' Biotech - International Company'' ஐ மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எல்லாம் குடாநாட்டின் வளர்ச்சிப் படிகளாகவே அமையும் என்பது உறுதி. இதுதவிர வயல் வேலைகளுக்கான தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்வதன் பொருட்டும் வேலையை இலகுவாக்குவதன் பொருட்டும் (பொருத்தமான நியாய விலையில் கிடைக்கக் கூடிய வகையில்) விவசாய உபகரணங்களின் பயன்பாட்டைத் துரிதப்படுத்த வேண்டும். வினைத்திறன் மிக்க மண் பரிசோதனைக் கூடம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் விவசாயத்தை மேம்படுத்தும்.

ஆகையால் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை நடைமுறையில் சாத்தியப்படுத்தி, விவசாயப் பெருமக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு ஒரு நிரந்தர மார்க்கத்தை ஏற்படுத்துவதற்காக எல்லோரும் இணைந்து செயற்படுவோமாக. ★

## அன்பு...,.

(7 ஆம் பக்கத் தொடர்)

வேரோடு சாய்த்துச், சாந்தி, அமைதி, சகிப்புத்தன்மை என்பவற்றை உண்டாக்கி 'எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் உலக மாதாவின் குழந்தைகள்' என்ற உணர்வை வளர்க்கப் பாடுபடுவோமென உறுதி எடுப்போம். இந்தக்கோட்பாட்டை வளர்ப்பதற்கு 'அன்பு' என்ற வித்தே எல்லோர் உள்ளத்திலும் ஊன்றப்படவேண்டும். இந்த வித்து விருட்சமாக வளர்ந்து ஒருவர் பலருக்கும் பலர் ஒருவருக்கும் சமாதான நிழலைப் பரப்பும் வகையில் செழிப்புத்தர வேண்டும்.

அன்பு என்பது எமது உடம்பினுள் உள்ள தெய்வீகசக்தியின் வெளிப்பாடாகும். இது உயிருக்குள்ள தனி ஆற்றல். அது உலகிலுள்ள இயக்க சக்தி. எல்லாவற்றிலும் வல்லமை மிக்கது. 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்' என்றார் வள்ளுவர். மானிட அமைப்பிலுள்ள பேரறிவின் புனிதத் தளத்திலிருந்தே அன்பு ஊற்றெடுக்கிறது. அது உண்மையான மனித சுபாவத்தின் எடுத்துக்காட்டு. அன்பு ஓர் உணர்ச்சியல்ல. ஆற்றலின் ஒரு திருவுருவமே அது. நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் அதை வெளிப்படுத்த வேண்டும். அன்பு அகன்று விசாலிக்கும் போது அகிம்சையாகிறது. அதாவது எவ்வுயிர்க்கும் துன்பம் எண்ணாத சமநிலை உருவாகின்றது. அப்பொழுது உலகம் எல்லாம் உள்ளமொன்றி ஒரு குலம் போல் சமாதான சகவாழ்வுடன் வாழலாம்.

'ஒரு கடவுள் ஓர் உலகம் உண்மை, அன்பு நேயமே பெருமையான சமயமென்று பிரியமாக வாழுவோம்.' ★

## முதியோரை.....

(6 ஆம் பக்கத் தொடர்)

ஆனால், இத்தொழு நோயாளி; இயேசு என்ற அம்மனிதன் தன்னைவெறுக்க மாட்டார், ஒதுக்கமாட்டார், ஏற்றுக்கொள்ளுவார், அன்புசெய்வார், அரவணைப்பார், ஆதரிப்பார் என்று உணர்ந்தவனாக இயேசுவிடமே வருகின்றான். (மாற் 1: 40) இயேசுவும் அவர்மீது பரிவுகொண்டு அவரைத் தொடுகின்றார். (மாற் 1: 41), இயேசு அவனது உடலை மட்டுமல்ல; உள்ளத்தையும், உள்ளுணர்வுகளையும் ஏன் அவன் ஆத்மாவையும் தொடுகின்றார். அந்தத் தொடுதலிலே முழு மனிதமும் சுகம் பெறுகின்றது. முழுமை பெறுகின்றது. இதனைத்தான் நாம் வாழுகின்ற காலத்திலேயே காணக்கூடியவாறு வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கின்றார் எம் தாய் அன்னை திரேசா. இவர் தொடுதலிலே தொழுநோய் நீங்கப்பெற்றவர்கள் ஆயிரம் ஆயிரம்.

இந்தத்தொடுதலுக்காக அதாவது; ஆறுதல் மொழிக்காக, அன்பு வார்த்தைக்காக, ஆதரவுக்காக, பாசத்திற்காக, உறவுக்காக கவனிக்கப்படாத வயதுமுதிர்ந்த பெற்றோர், கைவிடப்பட்ட முதியவர்கள், வருத்தங்களினால் வாதைப்படுபவர்கள், எத்தனையோ எத்தனையோ பேர்...? அவர்களது ஏக்கங்கள் தீரவேண்டுமாயின்; முதலிலே, நான்கு நல்ல, ஆறுதல் வார்த்தைகளோடு தொடங்குவோம்.பல தொழுநோய்களும், ஏன் தொற்று நோய்களும், உடல் வருத்தங்கள், உள வேதனைகளும் நீங்கும். இறையாசீர் உங்களோடு இருப்பதாக. ஆமேன்!


## கண்ணீர் அஞ்சலி

### மூத்ததம்பி நவரத்தினம்

பளைப் பிரதேச விவசாயிகளுக்குச் சிறந்த சேவையாற்றி கடந்த 11 — 02 — 2000 அன்று அகால மரணமடைந்த மாசார் விவசாய சம்மேளனத் தலைவர்

### மூத்ததம்பி நவரத்தினம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்குபற்றுவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல கேந்திர உத்தியோகத்தர்கள்,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
கமநல குழு உறுப்பினர்கள், பளை.

(சி-11099)

## மகாலக்சுமி ஸ்ரோர்ஸ்

உள்நாட்டு, வெளிநாட்டு வீடியோ கசற் துரித கதியில் அனுப்பி வைக்கப்படும். அத்துடன் கொழும்பிலிருந்து வீடியோக் கசற் உட்பட அனைத்துப் பொதிகளும் குறைந்த கட்டணத்தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

| மகாலக்சுமி ஸ்ரோர்ஸ் | மகாலக்சுமி ஸ்ரோர்ஸ் |
|---|---|
| 212, ஸ்ரான்லி வீதி, | 180, சென்றல் றோட், |
| யாழ்ப்பாணம். | கொழும்பு - 12. |
| T. P. No. 021 — 2024 | T. P. No. 01 — 347210 |
| 021 — 2025 | 01 — 446500 |

(சி/11101)

# 269 பயனாளிகளுக்கு 2ஆம் கட்ட கொடுப்பனவு

வலி. கிழக்கு, பெப். 20

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அசையும் அசையாச் சொத்துக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா மேலும் 269 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

ஜே — 283, ஜே — 277, ஜே — 286, ஜே — 262, ஜே — 268, ஜே — 260, ஜே — 259, ஜே — 274, ஜே — 282, ஜே — 263, ஜே — 265, ஜே — 272, ஜே — 275, ஜே — 284 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கே கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

இக் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடையவர்கள் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் தத்தமது வங்கிகளில் பணத்தினைப் பெற்று சட்ட வேலைகளை உடன் பூர்த்தி செய்யுமாறு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

## மின்கம்பம்

கொக்குவில், பெப். 20

ஈவினைப் பகுதியில் அண்மையில் புதிதாக நடப்பட்ட மின்கம்பங்களில் சில சரிந்த நிலையில் காணப்படுகின்றன.

(இ-69)


## கண்ணீர் அஞ்சலி

எம் இனிய நண்பன்
ச. செந்தூரன் (சோபி)
அவர்களின் அன்புத் தந்தையார்

### தம்பிஐயா சண்முகநாதன்

அவர்கள் கொழும்பில் மரணமடைந்த செய்தி கேட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அரியாலை வாழ் நண்பர்கள்.

(73831)



## கண்ணீர் அஞ்சலி

கற்கைநெறியில் எம்முடன் இணைந்து பயிலும்
திரு. த. அருணகிரிராஜா
(உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்.)
அவர்களின் தந்தையார்

### வடிவேல் தங்கராஜா

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அத்துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

பகுதிநேர மாணவர்கள்,
பட்டப்பின்-கல்வி டிப்புளோமா
யாழ்-பல்கலைக்கழகம்.

(73836)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர்
திருமதி J. இராஜநாயகம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மார்க்கண்டு பரமேஸ்வரி

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பகுதிநேர, முழுநேர மாணவர்கள்
பட்டப்பின் கல்வி டிப்புளோமா,
யாழ். பல்கலைக்கழகம்.

(73837)


# யா. கூ. சங்க கிளைக் குழுத் தேர்தல்

அரியாலை, பெப் 20

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முப்பது கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கிளைகளது பொதுச் சபை உறுப்பினர்களை அழைத்துத் தேர்தல் மூலம் கிளைக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ—17)

# கற்கை நெறிக்கு தெரிவானோர் இங்கேயே பதிவு

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட சட்டமாணி கற்கை நெறிக்கு யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சட்டமாணிகற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட 14 மாணவர்களையும் கொழும்புக்கு வந்து பதிவு செய்யுமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை எடுத்த நடவடிக்கைகளை அடுத்து இதற்கான பதிவுகளை யாழ்ப்பாணத்தில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் தமது பதிவுகளைச் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)


## தேவை

A/L இல் கணக்கியல் சித்தி பெற்ற
பெண் கணக்காளர் தேவை
வயது 25-30 வரை
29-02-2000-க்கு முன் விண்ணப்பிக்கவும்
விளம்பர இல. 1005,
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

(73822)


# நாகர் கோயில் பாடசாலையில் இலவச பற்சிகிச்சை முகாம்

வடமராட்சி, பெப். 20

வடமராட்சி கிழக்கிலுள்ள மாணவர்களுக்கென இலவச பற்சிகிச்சை முகாம் ஒன்று இம் மாதம் 28 ஆம் திகதி நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்பற்சிகிச்சை முகாமில் பல் சம்பந்தமான நோய்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்ட 171 மாணவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

இப்பகுதியிலுள்ள நாகர் கோயில் மகாவித்தியாலயம், நாகர் கோயில் அ.த.க. பாடசாலை, அம்பன் அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை மேற்கொண்ட போது 171 மாணவர்களுக்கு பல் சம்பந்தமான நோய்கள் இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டு, இவர்களுக்கென பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனச் சிபார்சுசெய்யப்பட்டது.

பற் சிகிச்சை முகாமின் போது மாணவர்கள் தவறாது உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு துன்னாலை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. இளங்கோ அறிவித்துள்ளார்.

(ஐ-173)

# சிறுவர் பாதுகாப்பு நிதியம்; புதிய உதவித் திட்டம் ஆரம்பம்

மூளாய், பெப். 20

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் புதிய உதவித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக கடந்த மாதம் வன்னியில் இருந்து திரும்பிய சுமார் இருபத்துமூன்று குடும்பங்களுக்கு உதவித்திட்டத்தின் மூலம் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவையான சமையற்பாத்திரங்கள், வீட்டுப்பாவனைப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் தொழில் உபகரணங்கள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன..

கடந்த பதினைந்தாம் திகதி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் மு. சிவராசா தலைமையில் நடைபெற்ற வைபவத்தின் போது இப்பொருள்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான திட்டங்கள் மூலமாக வன்னியில் இருந்து திரும்பும் மிகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ள குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-99)


## பாராட்டுகின்றோம்

அகவை அறுபதில் அகமகிழ்வீர்
27-02-2000 ஞாயிறு
அகவை அறுபது காணும்

### கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியல் பீடம்,
தலைவர், நுண்கலைப்பீடம், யாழ்-பல்கலைக்கழகம்.)

அன்புசால் ஐயா! ஆசான்களையும் அறிஞர்களையும் உருவாக்கும் தங்கள் பணி பல்லாண்டு காலம் வளம் பெற ஆசீர்வதிப்பதோடு ஆண்டவன் அருளையும் வேண்டி தங்கள் வாழ்வு மகிழ்வுடன் நிலைத்திட வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை
புலோலி.

(சி/11092)



## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடும் வேலைக்கான கேள்விகள் 01-03-2000 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதே தினத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

29-02-2000 ஆம் திகதி பகல் 11.30 மணி வரை கேள்விப் பத்திரங்களை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை (மீன் சந்தை) பழைய அலுவலகக் கட்டடத்தை உடைத்து சகல பொருட்களையும் எடுத்துச் செல்லுதல் | 300/- | 1000/- |

மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. க. சிவாஜிலிங்கம்
தலைவர்
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
16-02-2000

(சி/11087)



## கலைவார இறுதி நிகழ்வு

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்படும் கலைவார நிகழ்வுகளின் இறுதி நிகழ்வு 21-02-2000 திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

இடம்: கைலாசபதி கலை அரங்கு
காலம்: 21-02-2000 திங்கட்கிழமை
காலை 9மணி முதல் பி.ப. 6 மணிவரை

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர்)

சிறப்பு விருந்தினர்:
பேராசிரியர் S. பாலச்சந்திரன்
(பீடாதிபதி, கலைப்பீடம்)

காலை 9-30 மணிக்கு
பரிசளிப்பு வைபவமும்
பிற்பகல் 2-00 மணிக்கு
கலைக்குயில் கானங்கள்
இசைநிகழ்வும் இடம்பெறும்.
அனைத்துக் கலைப்பீட மாணவர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

— கலைப்பீட மாணவர் ஒன்றியம்

விளம்பர அன்பளிப்பு:
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி) - யாழ். மாவட்டம்

(73829)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கே.கே. எஸ். வீதி, பலாலி என்னும் முகவரியைச் சேர்ந்த நவரட்ணம் அல்போன்ஸ் என்பவரது தேசிய அ. அ. (773583994 V), விசேட அ. அட்டை (0907003760) இரண்டும் 18 - 02 - 2000 சுன்னாகத்திற்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சண் ராஜ் கொமினிக்கேஷன் (நாகம்ஸ் தியேட்டர் முன்பாக) சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(73841)

பாவிலுப்பிள்ளை அன்ரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (783343541V) யாழ். போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Dr. ஜோர்ஜ் கபிரியேல் வைத்தியசாலை, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(73833)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த மகேந்திரன் இரவீந்திரராசா ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அ. (750230116 V — 091029896) நுணாவில் துர்க்கையம்மன் ஆலயத்துக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். வ. நவரத்தினம் (பந்தல் உரிமையாளர்) நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
(73845)

## விற்பனைக்கு

சிங்கர் தையல் மெசின் (ரூபா 5000) விற்பனைக்கு உண்டு. மாலை 4 மணிமுதல் 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்: தொடர்பு: ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை.
(73821)

Shriram Honda E650K ஜெனரேற்றர், Sony CD Player GRX - 8 (2000w), மரத்தளபாடம் செய்வதற்குரிய Bandsaw உபகரணமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 67, செட்டித்தெரு, நல்லூர்.
(73826)

12'' கிரைண்டர் சட்டியும், 20 HP, 1000 RPM கொண்ட மாருதி என்ஜினும் பாவனைக்கோ அல்லது உதிரிப்பாகத்திற்காகவோ உடன். விற்பனைக்கு உண்டு தொடர்பு: இல. 70, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(73828)

## விற்பனைக்கு

SisiiR80philco இரட்டைக் கதவு, மிகவும் நல்லநிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. வியாபார ஸ்தாபனத்திற்கும் உகந்தது. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, (புகையிரத நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.
(73735)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில், 3½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசரத்தினம் நற்சிங்கம் 83, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு.
(73801)

## உடன் விற்பனைக்கு

பழைய வீட்டுப் பாகங்களான ஓடு, கைமரம், சீலிங், சிலாகை, நிலை, கதவு, யன்னல் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டியது: V. S. அழகேசன், முதலாம் கட்டைச் சந்தி, பிரதான வீதி, பருத்தித்துறை.
(73820)

## O/L கணிதம் விசேட வகுப்புக்கள்

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்திப் புள்ளியடையாதவர்களுக்கும் மேல்படிப் புக்காகவும் உத்தியோகத்துருக்காகவும் Aptitude செய்வதற்கும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.
(73774)

## திருமணசேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்து, கிறிஸ்தவ மணமக்கள் உண்டு. துரிதமான திருப்திகரமான சேவை (அரசாங்க பதிவு இலக்கம்: 34) நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம், 90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.
(73571)

## ஜோதிடம்

பொய்யாமொழி ஜோதிடம தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும், என் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக்கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் மடத்திலும், சனி, செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம்.
(73759)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தேவையான அளவில் சுத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: இல. 40, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(73751)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை, சுறுசுறுப்பான சேவை. இல. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(73738)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1967 இல் பிறந்த 7 இல் செவ்வாய் (32 பாவம்), அவிட்டநட்சத்திரம், A/L Bio Science செய்து வவுனியா பல்கலைக் கழகத்தில் Diploma English முடித்துவிட்டு தற்போது ஜேர்மனியில் கார்க் கொம்பனியில் கடமபுரியும் ஸ்பொன்சர் செய்யத் தகுதியுள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1003, மே/பா உதயன். யாழ்ப்பாணம்.
(73787)

கைதடியில் படித்த 30 வயது நிரம்பிய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு வாய்பேசாத மணமகள் தேவை. தொடர்: 42/7, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
(73824)

## மணமகன் தேவை

உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 71 ஆம் ஆண்டிற் பிறந்த அழகான பட்டதாரிப் பெண்ணுக்கு (அனுஷம்-4 இல் செவ்வாய்) தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: சி. சிவ்சாமி, 37/02, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(73811)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய 7 இல் செவ்வாயுடைய ஆசிரியைக்கு (உத்தரட்டாதி 3 ஆம் பாதம்) பெற்றோர் தகுந்த மணமகனை எதிர் பார்க்கின்றனர். விளம்பர இல. 1006, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(73835)

## ENGLISH

(Grade-4, 5, 6, 7, 8, 9 மாணவர்களுக்கு அடிப்படை விசேட பயிற்சிகளுடன் கூடிய ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. T Sagatheven (B.A. London) No. 46, Pirappan-kulam, Lane, Vannarpannai, Jaffna.
(73816)

உ

# பூப்புனித மங்கள நீராட்டு விழா அழைப்பு

***◆◆***************◆◆***

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் மாசித் திங்கள் 12-ஆம் நாள்

**24 - 02 - 2000 வியாழக்கிழமை**

காலை 7. 30—8. 30 மணியளவில் வரும் சித்திரை நட்சத்திரமும் பஞ்சமித் திதியும் சித்தாமிர்தயோகமும் கூடிய கும்பலக்கின சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறைசெல்வி

## கௌசல்யா அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு ருதுசாந்தி செய்யத் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்பசமேதரராய் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்துச் செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி ச. இந்திரகுமார்
குடும்பத்தினர்.
(உமா ஸ்ரோர்ஸ், வண்ணை சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.)

187/8, கில்னர் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. பெருமிதமாய் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.
(சி/11035)

# கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச சபை நயினாதீவு உப அலுவலகப் பணிமனையில் நூலக சேவகராகக் கடமையாற்றும்

திரு. இ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி இராசையா நாகம்மா

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அவர்தம்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.
வேலணைப் பிரதேசசபை.
(73844)

# 30 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 1968 — 06 — 29

உதிர்வு: 2000 — 01 — 21

## அமரர் தம்பித்துரை கிருதாயினி

(மகள்)

பாசப்பறவை அனுராவே! உன் ஆத்மா சாந்தி அடைய பரந்தாமனைக் கண்ணீராலும் மனதாலும் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (20 - 01 - 2000) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் எனது சகோதரியின் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

க. சிவம்
(சகோதரன்)

புதுறோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(73846)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி கனகரெத்தினம் நாகம்மா

தோற்றம் 19—09—1922

மறைவு 21—01—2000

பிரமாதி வருடம் தைத்திங்கள் 7 ஆம் நாள் வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி கனகரெத்தினம் நாகம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20—02—2000) ஞாயிற்றுக்கிழமை காலை 8. 00 மணிக்கு வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் 22-02-2000 செவ்வாய்க்கிழமை மு. ப. 11. 00 மணிக்கு எங்கள் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆராச்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(73849)

# விசர்நாய்க் கடிக்கு ஏற்பு ஊசி; கவனக்குறைவால் சிறுவன் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.20

விசர்நாயினால்கடியுண்ட சிறுவன் ஒருவனுக்கு அதற்குரிய விசர்நோய்த் தடை ஊசி மருந்தை (ஏ.ஆர்.வி) ஏற்றிக்கொள்ளாமல், ஏற்புத்தடை ஊசி மருந்தை மட்டும் போட்டுவிட்டு அது போதுமானது என்று எண்ணிப் பெற்றோர் கவனக்குறைவாக இருந்ததால் ஒரு மாதத்தின்பின் விசர்நோய் கண்டு அநியாயமாக உயிரிழந்தான்.

இச்சம்பவம் இருபாலை ஆனந்தபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் 13ஆம் திகதி நாயினால் கடியுண்ட கதிரமலை கருணைராசா (வயது 12) என்ற சிறுவனே யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த புதனன்று உயிரிழந்தான்.

நாய் கடித்ததற்கு ஏற்புத்தடை ஊசி மட்டுமே போட்டுக்கொண்ட இச் சிறுவனுக்கு ஒரு மாதத்தின் பின்னர் அடிவயிற்று நோவுடன் காய்ச்சல் ஏற்பட்டது. அத்துடன் மூச்சுத் திணறலும் இருந்தது. நீர்வெறுப்பு நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளுடன் பெற்றோர் அவனை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அனுமதிக்கப்பட்டு இரு தினங்களில் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு சிறுவன் உயிரிழக்க நேர்ந்தது.

இம்மரணம் தொடர்பான மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி ரி.ஜெயரட்ணம் மேற்கொண்டார். சாட்சியமளித்த டாக்டர் சாரங்க விஜயகுணவர்த்தன விசர்நாய்க் கடியே மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

குடாநாட்டில் அநியாய மரணங்களை ஏற்படுத்தும் காரணிகளில் இரண்டாவதாக உள்ள விசர்நாய்க் கடி தற்போது அதிகரித்து வருகின்றது. சாதாரணமாக நாயினால் கடியுண்டோர் நாய் விசர்நாயா என்பதை உறுதி செய்துகொண்டு அதற்கான தடுப்பு மருந்தை உரிய காலத்தில் பெறவேண்டும்.

ஆனால் நாய் கடித்ததும் ஏற்புத்தடை ஊசியை மட்டுமே ஏற்றிக்கொண்டு அது போதுமானது எனக் கருதிக் கவனக்குறைவாக இருந்து உயிராபத்தை தேடிக்கொள்ளும் சம்பவங்கள் இங்கு அதிகரித்துள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். (ஐ-15)

## சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் என அழைக்கப்படும் ஸ்ரீ பூதநாத சுவாமி கோயில் அலங்கார உற்சவம் கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இறுதி நாளான இன்று காலை தெரு வீதி உலா இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முத்துச்சப்பரத்தில் சுவாமி வீதியுலா வருவார்.

* * *

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் பூரத்திருவிழா விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம்பெறும். (க-30)

குளிர்மையின் மறுபெயர்!

NIPPON

இலங்கையில்
அதிகூடிய தெரிவு 30ற்கும்
மேற்பட்ட மாதிரிகள்!

மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON

'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

(சி-10982)

மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம்பிடித்த

வீடியோ கலா மினி

எமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சிங்கப்பூரில் இருந்து புதிய ரக மிக்சர்கள், புத்தம் புதிய கமராக்களை வரவழைத்து திறம்பட சேவையாற்றுகிறோம்.

பூப்புனித நீராட்டு விழாவிற்கென விசேடமாக அமைக்கப்பட்ட

- சுழல்தாமரை
- மாடிப்படிசெற்
- அன்ன ஊஞ்சல்
- பிறை
- ராஜகதிரை
- சுழல் ராட்டினம்
- பலவர்ணக்குடைகள்
- சுழல் நட்சத்திரம்

போன்ற பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச் செய்து வருகின்றோம்.

மேலும் அழகிய இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த மின்விசிறிகள், பலவர்ணமின்குமிழ்கள் பிளாஸ்ரிக் கதிரைகள், சாப்பாட்டு மேசைகள், பாய்கள், ரூரிஸ்ற் குடைகள் ஆகியவற்றுடன் உங்கள் இல்லங்களின் அழகுக்கு ஏற்ப X,M,N,T,K வடிவங்களில் நீரோடிச் சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும்

தண்ணீர்த்தொட்டி இல்லாவிடில் கனடாவில் இருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட 4 அடி உயரமான பிளாஸ்ரிக் தொட்டி வசதியும் உண்டு.

காட்சிகளுக்கு ஏற்ற பலவர்ண ஆடைகளை மாற்றிப் படம் பிடிப்பதற்கு விசேடமாக அமைக்கப்பட்ட பூங்கா வசதியும் எம்மிடம் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் திருப்தியே! எங்கள் சேவை!

வீடியோ கலா மினி
அச்சுவேலி

தொலைபேசி இலக்கம் 070 - 212431

மேலதிக தொடர்புகளுக்கு :-

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மரத்தளபாடத் தொழிலகம்,
இலங்கை வங்கி முன்பாக,
பிரதான வீதி,
சாவகச்சேரி.

கல்யாணி
பஸ்நிலையம் முன்பாக
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11064)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 19ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(124365ஏ), (135669ஏ), (135751ஏ)

### சாவகச்சேரி

(130518ஏ), (130518பி), (134926ஏ), (134926பி), (134943ஏ), (134955ஏ), (134958ஏ), (134958பி), (134958சி)

### யாழ்ப்பாணம்

(130019ஏ), (130395ஏ), (132397ஏ), (132397பி), (136905ஏ), (136905பி), (136908ஏ), (136908பி), (136967ஏ), (136985ஏ), (136985பி), (136985சி), (136986ஏ), (136986பி), (136986சி), (137010ஏ), (137012ஏ), (137090ஏ), (137133ஏ)

### கரவெட்டி

(135272ஏ)

### கோப்பாய்

(131554ஏ), (131554பி), (136209ஏ), (136229ஏ)

### நல்லூர்

(133265ஏ), (135988ஏ), (135988பி), (137201ஏ), (130707ஏ), (131821ஏ), (135523ஏ), (135563ஏ), (135563பி), (135672ஏ), (135672பி), (135766ஏ)

### பருத்தித்துறை

(124636ஏ), (135333ஏ)

### சண்டிலிப்பாய்

(127319ஏ), (129238ஏ), (130725ஏ), (130979ஏ), (131589ஏ), (131589பி), (131645ஏ), (131645பி), (131645சி), (131647ஏ), (131723ஏ), (131723பி), (131798ஏ), (131798பி), (131798சி), (131803ஏ), (131847ஏ), (135511ஏ), (135511பி), (135528ஏ), (135528பி), (135528சி), (135528டி), (135540ஏ), (135553ஏ), (135659ஏ), (135659பி), (135697ஏ), (135697பி), (135706ஏ), (135721ஏ)

### தெல்லிப்பழை

(128947ஏ), (131691ஏ), (131691பி), (131787ஏ), (131794ஏ), (131823ஏ), (134756ஏ), (135578ஏ)

### உடுவில்

(136239ஏ), (136239பி), (128901ஏ), (128946ஏ), (129241ஏ), (131587ஏ), (131599ஏ), (131599பி), (131599சி), (131669ஏ), (131727ஏ), (131727பி), (131727சி), (131743ஏ), (131743பி), (131757ஏ), (131757பி), (131777ஏ), (131779ஏ), (131795ஏ), (131819ஏ), (131819பி), (131819சி), (132764ஏ), (135594ஏ), (135594பி), (135594சி), (135656ஏ), (135740ஏ), (135740பி)

(க)

## விளையாட்டரங்கு

பாக். அணியுடனான

# நேற்றைய ஆட்டத்திலும் இலங்கை அணி வெற்றி!

கராச்சி,பெப்.20

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித்தொடரை இலங்கை அணி 3-0 என்ற அடிப்படையில் வென்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 104 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 241ஓட்டங்களைப் பெற்றது. மாவன் அத்தபத்து 77 ஓட்டங்களையும், மகில ஜெயவர்த்தன 43 ஓட்டங்களையும் அடித்தனர். அப்துர் ரசாக் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 39.3 ஓவர்களில் 137 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது. சயீட் அன்வர் 30 ஓட்டங்களையும், வாசீம் அக்ரம் 29 ஓட்டங்களையும்விளாசினர். நுவான்சொய்ஸா, சனத் ஜெயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக்கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டநாயகனாக, மாவன் அத்தப்பத்து தெரிவு செய்யப்பட்டார். (இ-8-4)

# பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி!

ஹராரே,பெப்.20

இங்கிலாந்து -ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி 131 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டமிழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று இந்த ஆட்டத்தில் வென்றது.

நடைபெற்று முடிந்த முதலாவது ஒருநாள் ஆட்டத்திலும் இங்கிலாந்து அணியே வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-8-4)

# ஆஸி. அணி வெற்றி ஹைடின் அரைச்சதம்!

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 31 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. மக்றா, ப்றட் லீ ஆகியோர் தலா3 விக்கெட்டுக்களையும் ஷேன்லீ, ஷேன்வோர்ன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 25ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிக்கான இலக்கை எட்டியது. ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர் மத்யூஹைடின் அரைச் சதம் அடித்தார். நேற்றைய ஆட்டநாயகனாக ப்றட் லீ தெரிவு செய்யப்பட்டார். (இ-8-4)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசஅதிபர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக்கழக அணிகளுக்கு இடையில் இன்று காலை 9மணிக்கு இடம்பெற உள்ள வலைப்பந்தாட்டப் போட்டிகளின் முதல் சுற்றில் ஸ்ரீமுருகன் வி.க. அணியுடன் ஸ்ரீ அம்பிகா வி.க அணியும், நயினாதீவு சனசமூக நிலைய வி.க. அணியுடன் ஐயனார் வி.க. அணியும் மோதும். (இ-8)

## உதைபந்தாட்டம்

ஈ.ஆர். போக்குவரத்துச் சேவை ஆதரவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறவுள்ள இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐ.வி.க. அணியுடன் வதிரி பொயேர்ஸ் வி.க. அணியும், மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கருணாகரன் வி.க. அணியுடன் டயமன்ஸ் வி.க. அணியும் மோதும். பருத்தித்துறை ஐ.வி.க. தலைவர் ம.சூரியகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை தேசியசேமிப்பு வங்கி முகாமையாளர் மா.பரமானந்தன் கலந்துகொள்வார்.

* * *

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழக அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு புத்தூர் வீனஸ் வி.க. மைதானத்தில் இடம்பெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டிகளில் அச்செழு வளர்மதி வி.க.அணியுடன் நீர்வேலி ஐ.வி.க.அணியும்சில்வெஸ்ரார் வி.க. அணியுடன் இடைக்காடு கலைமகள் வி.க.அணியும் மோதும். (இ-8-86-4)

# கச்சாய் சனசமூக நிலையத்தை உடைத்து புத்தகங்கள் சூறை!

## ஜனாதிபதிக்கு பிரதேச சபைத் தலைவர் கடிதம்

வடமராட்சி,பெப்.20

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தைச் சீருடையினர் உடைத்து அங்கிருந்த சுமார் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை எடுத்துச் சென்றுள்ளதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் முறையிட்டுள்ளார்.

யாழ். பொதுநூலக எரிப்பு போன்றதாக இச்சம்பவம் அமைந்துள்ளது. யாழ். பொதுநூலகம் புனரமைக்கப்பட்டுவரும் இவ்வேளையில் இச்சம்பவம் வேதனை தருவதாக அமைந்துள்ளது. சீருடையினர் எடுத்துச் சென்ற புத்தகங்களை மீளப்பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதோடு குறிப்பிட்ட சனசமூக நிலையத்துக்கு நஷ்டஈடு வழங்குமாறும் வேண்டுகின்றேன்.

இவ்வாறு அக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இந்த சனசமூக நிலையக் கட்டடத்தின் கூரை ஓடுகள்; தளபாடங்கள் என்பன தனங்களப்புப் பகுதிக்கு ஏற்றிச் செல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

(ஐ-173-117)

# ஆசிரியர் பதவி உயர்வு நிபந்தனைகள் தளர்வு

யாழ்ப்பாணம், பெப்.20

இலங்கை ஆசிரியர் சேவையில் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுக்காக விதிக்கப்பட்டிருந்த பல நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:- .

1994 ஒக்ரோபர் 6 ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஆசிரியர் சேவைச் சட்டத்தின்படி ஒரு தரத்திலிருந்து அடுத்த தரத்துக்கு செல்வதற்கு பல கடினமான - நடைமுறைப்படுத்த முடியாத- நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிபந்தனைகளை நீக்க வேண்டுமென ஆசிரிய தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததன் விளைவாக தற்பொழுது உயர் கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன இந்த நிபந்தனைகளை தற்காலிகமாக தளர்த்துவதற்கு சம்மதம் தெரிவித்து அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுள்ளார்.

இதற்கான சுற்றறிக்கை விரைவில் மாகாண அமைச்சினால் மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது - என்றார்.

# புலம்பெயர்ந்த தமிழ் மாணவருக்கு பொது நுண்கலைப் பாடத்திட்டம்

## துறைசார் நிபுணர்கள் சுவிஸில் முயற்சி

**- சுவிஸில் இருந்து சங்கீத் -**

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பரந்து வாழும் தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கான நுண்கலைப்பாடப் போதனையைப் பொதுவான பாடத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் போதிக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பான பொதுக் கருத்தையும் ஆலோசனைகளையும் பெற்று பாடத்திட்டத்தினை உருவாக்குவதற்கான முன்முயற்சிகளை எடுக்கும் வகையிலான கருத்தரங்கு ஒன்று சுவிற்சர்லாந்தில் நடத்தப்பட்டு வருகின்றது, கடந்த வெள்ளியன்று ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முடிவடையும்.

பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, கனடா, பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, டென்மார்க் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் வசிக்கும் நாடுகளில் இருந்து இசை, நடன, நாடக ஆசிரியர்களும், நுண்கலை நிபுணர்களும், பேராசிரியர்களும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றுகின்றனர்.

இலங்கையில் இருந்து பேராசிரியர் கா.சிவத்தம்பி இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக். கலந்து கொள்கிறார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்வோர் பொதுப் பாடத்திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்துவதன் மூலம் தமிழ் மாணவர்கள் சிறந்த பயனைப் பெறமுடியும் என்று பேராசிரியர் சிவத்தம்பி அங்கு தெரிவித்தார்.

பொதுவான நுண்கலைப் பாடவிதானத்துக்குரிய ஆலோசனைகள் பலரிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

# 4 இளைஞர்கள் கைது

யாழ். முத்திரைச்சந்தை மற்றும் சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்த 4 இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முத்திரைச்சந்தைப் பகுதியில் கடந்த 16ஆம் திகதி படையினர் நடத்திய தேடுதலின் போது யாழ். வைத்தீஸ்வரா சந்திப் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரராஜா சுதாஸ்கரன் (வயது 28), யாழ். ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த குலேந்திரன் கௌரீதரன் (வயது 19), பாக்கியநாதன் விஷ்ணுகாந்தன் (வயது 24) ஆகியோர் கைது செய்யப்பட்டதாகவும் -

கடந்த 17ஆம் திகதி சுன்னாகம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த சிங்கராஜா ஸ்ரீமோகன்(வயது35) என்பவர் கைது செய்யப்பட்டார் எனவும் உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

. அதேசமயம் -

கடந்த 5ஆம் திகதி கைதடி தெற்கைச் சேர்ந்த வரதராசா சுதர்சன் என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டதாக 512ஆவது படைப்பிரிவினரால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-6-9-15)

# மேயர் பதவியை கந்தையனே ஏற்றுக்கொள்ள வேண்டும்

## புளொட் உறுப்பினர் கோரிக்கை

யாழ். மாநகரசபையின் வெற்றிடமாகவுள்ள மேயர் பதவியை தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் எஸ். கந்தையன் ஏற்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட புளொட் அமைப்பின் உறுப்பினரும், யாழ். மாநகரசபை உறுப்பினருமான எம். தவநாதன் கேட்டுள்ளார்.

எஸ். கந்தையனுக்கு இது விடயம் தொடர்பாக அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேர்தல் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள தாங்களே அப்பதவியை ஏற்று மாதந்தோறும் கூட்டங்களை நடத்தி சகஉறுப்பினர்களின் பணிகள் தடங்கல் இல்லாது தொடர உதவவேண்டும். எமது கட்சி சார்ந்த ஏனைய உறுப்பினர்களும் தங்களுக்கு ஆதரவு வழங்குவார்கள்.

மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்க வேண்டும் - என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ஐ-க)

### நிறைவு விழா

சுன்னாகம் அருள்மிகு பழநி ஆண்டவர் ஆலய 16ஆம் ஆண்டு நிறைவுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை அபிஷேகம், விஷேட பூசைகள் என்பவற்றுடன் நடைபெறும்.

### மருத்துவபீட இறுதி ஆண்டு பரீட்சை முடிவு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி ஆண்டுப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.இந்தப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 60க்கும் மேற்பட்டோர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் எஸ்.கண்ணன், ரி.சிவகுமார் ஆகியோர் மருத்துவவியல் துறையில் 2ஆம் வகுப்பில் உயர்தரச் சித்தி பெற்றுள்ளனர்.

(இ-6)

### நோர்வே......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரிடம் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இவ்வாரம் மீண்டும் லண்டன் செல்லும்போது இயல்பு நிலையை ஏற்படுத்துவது குறித்து இலங்கை அரசின் நிலைப்பாட்டை விளக்குவார் என்று நம்பப்படுகிறது.

லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த பின்னர் அடுத்த பத்து நாள்களுக்குள் நோர்வே வெளிவிவகார அமைச்சர் மீண்டும் இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

### படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் இதில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் காயமடைந்தவர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சுவேலி பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-5-180-9-10)

### பாஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் வழக்குத் தாக்கல் செய்வோருக்கு தேவையான சட்டஉதவிகள் அனைத்தையும் வழங்க நாம் தயார்.

மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி கே.தங்கவடிவேல் இவ்வாறு தெரிவித்தார்.

படையினரால் கொண்டுவரப்படவுள்ள 'பாஸ்' நடைமுறை இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடமாடும் சுதந்திரத்தை மீறும் செயலாகும். இது ஒரு மனித உரிமை மீறலும் கூட. எனவே இது தொடர்பாக எவராவது உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யலாம். அதற்கான நிதி உதவியையும் இலவச சட்ட உதவியையும் வழங்க நாம் தயார்.

பாஸ் நடைமுறை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரசால் வெளியிடப்படுவதற்கு முன் வழக்கைத் தாக்கல் செய்வது சிறந்தது. இதற்கு விரும்புவோர் மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-6)

### 2000 பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன என்றும் -

எனினும் இக்கப்பல் சேவை எப்பொழுது நடைபெறும் என்பதனை உடனடியாக கூறமுடியாதுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

### கைதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

கைதிகளைப் பார்வையிடுவதற்கு பத்திரிகையாளர்களோ அல்லது அரசியல்வாதிகளோ அழைத்துச் செல்லப்படமாட்டார்கள் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5-8)


## தரிசனம் இலங்கை - 2000

இன்னிசை நற்செய்திக் கூட்டம்!

சுகமளிக்கும் ஆராதனை!!

இன்னிசைக் குயில் ~ சகோதரி எஸ்தர் பேபி

(சின்னஞ்சிட்டுக் குருவியே புகழ்)

சுவிசேஷ இடிமுழக்கம் ~ சங்கை ஜெயச்சந்திரன்

அன்பின் அப்போஸ்தல தூதுவன் ~ சங்கை டாஸன்

சாம்சன் மற்றும் பலர்

'வியாதியஸ்தவர்களுக்கான விசேட ஜெபங்கள்'

இடம் — கானான் ஜெப ஆலயம்.

காலம் — இன்று (20-02-2000) ஞாயிற்றுக்கிழமை

இன்று காலை 9.00 மணிக்கு விசேட ஆராதனையும் மாலை 3.00 மணிக்கு சுகமளிக்கும் ஆராதனையும் நடைபெறும்.

'யாவும் இலவசம்! யாவரும் வருக!!'

"இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

- (அப்போஸ்தலர் 16:31)

கானான் ஜெபஆலயம்

இருபாலை.

(C/11097)



## ENGLISH

புதிய பிரிவு

OXFORD ENGLISH ACADEMY

சுப்பர்மடம், பருத்தித்துறை.

*சனி – 11 மணி*

*ஞாயிறு – 5 மணி*

MATHS Centre

நெல்லியடி.

*திங்கள் – 6.15*

*ஞாயிறு – 6.15*

*சனி – 6.15*

By:- MR.B.JOTHY

(73817)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக கொழும்பு மாவட்ட தொடர்பாளராகிய நண்பர் **Rtr.ச.செந்தூரன்** அவர்களின் தந்தையார்

**திரு.தம்பிஐயா சண்முகநாதன்**

(மின்மானி வாசிப்பாளர், சாவகச்சேரி)

15.02.2000 அன்று மாத்தறையில் அகால மரணமான செய்தியறிந்து அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் இழப்பால் துய ருற்றிருக்கும் அவர் தம் சுற்றத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கிறோம்.

**- யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் -**

(C/11104)

## கண்ணீர் அஞ்சலி

**யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாள்ர் த.அருணகிரிராஜா அவர்களின் தந்தையார்**

**வடிவேல் தங்கராஜா**

**அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு தென்மராட்சிக் கல்வி வலயம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.**

தென்மராட்சி கல்வி வலயம்

சாவகச்சேரி.

(C/11106)

## மரண அறிவித்தல்

**திருமதி மேரி திரேசா திருச்செல்வம்**

(இளைப்பாறிய ஆசிரியர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மேரி திரேசா திருச்செல்வம் நேற்று (19.02.2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தியடோர் அவர்களின் அருமை மகளும் காலஞ்சென்ற ஜோசவ் திருச்செல்வத்தின் (கட்டடக் கலைஞர்) அன்பு மனைவியும் அல்போன்சா திருச்செல்வராணி, அல்போன்சா திருச்செல்வமலர், யூடித்செல்வக்குமாரி (சுகாதாரத் திணைக்களம், வவுனியா), யூட் செல்வக்குமார் (ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி), மேரி திரேசா, கிறிஸ்ரா திருமகள் (கட்டடத் திணைக்களம்), அன்ரனற் திருச்செல்வி, காலஞ்சென்ற ஜொய்சி செல்வதி ஆகியோரின் அருமைத் தாயாரும் கோபிலங்கநாதன் (சேமிப்பு வங்கி, மன்னார்), செல்வச்சந்திரன் (ஆசிரியர், முல்லைத்தீவு), செல்வராஜா (சுகாதாரத் திணைக்களம், வவுனியா), செறீன், சேளி செல்வரட்ணம் (தொழில்நுட்பவியலாளர்), அன்ரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் குணரட்ணம், நவரட்ணம், பாலரட்ணம், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், ஜீவரட்ணம், அழகரட்ணம், ஜெயா, கமலா, லீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தினேசன், நிதர்சனா, ஜனனி, திஷாரன், திஷானி, நிலோஜன், நிரோஷினி, ஷெரோன், டினக்ஷி, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (20.02.2000) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

யூட் (மகன்)

(ஆசிரியர், St.John's College)

217/A ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(C/11107)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.